Registered as a News Paper பக்கங்கள் 08 விலை ரூபா: 6-00

# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

நாதம் 08 திருவள்ளுவர் ஆண்டு 2028 கார்த்திகை 26 (11-12-1992) வெள்ளிக்கிழமை ஓசை 297

## கனிஷ்ட தொழில் நுட்ப சான்றிதழ் பரீட்சை

ஆண்டு 9-ல் கல்வி பயிலும் மாணவர்களுக்கான கனிஷ்ட தொழில் நுட்பச் சான்றிதழ் பரீட்சை 17-ம் திகதி தற்போது க. பொ. த. (சா/த) பரீட்சை நடைபெறும் நிலையங்களில் நடைபெறும். இதற்கான பரீட்சார்த்திகளின் நிரல்களையும், அறிவுறுத்தல்களையும் அதிபர்கள் தங்கள் கோட்டக் கல்வி அலுவலகங்களில் இருந்து 14-ம் திகதி சேகரித்து அறிவுறுத்தல்களுக்கு அமைய தமது பாடசாலை மாணவர்களை குறிப்பிட்ட பரீட்சை நிலையங்களுக்கு அழைத்துச் செல்வதற்கு ஆவன செய்யுமாறும் தற்பொழுது (7 ஆம் பக்கம் பார்க்க)

# போரை நிறுத்த அரசு தயாரில்லை

# படைகளை நவீனப்படுத்த திட்டம்

## அடுத்த ஆண்டில் புதிய போருபாயம்

(யாழ்ப்பாணம்)

போர்நிறுத்தம் செய்து, விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு சிறிலங்கா அரசாங்கம் விரும்பவில்லை என்றும், இராணுவத்தை நவீனமயப்படுத்தி புலிகளுக்கு எதிரான யுத்தத்தை தீவிரப்படுத்துவதிலேயே அரசாங்கம் அக்கறை கொண்டிருப்பதாக நம்பகமான வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது. நவீன ஆயுத தளபாடங்களைப் பெற்று, போரில் மேலாதிக்க நிலையை நிலைநாட்ட வேண்டும் என்பதிலும், புலிகள் பலவீனமடையும்வரை தொடர்ந்து இறுக்கமான போர் அணுகுமுறையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதிலும் இராணுவ உயர்மட்டம் தீவிர போக்கைக் கொண்டிருப்பதாக இவ் வட்டாரங்களிலிருந்து மேலும் தெரியவருகிறது.

சுமார் ஒருவருட காலமாக சிறிலங்கா அரசாங்கத்துடன் பேச்சு வார்த்தையில் ஈடுபடத் தயாராக இருப்பதாக விடுதலைப் புலிகள் தெரிவித்து வந்துள்ள போதும், யுத்த நிறுத்தம் ஒன்றைச் செய்து, பேச்சு வார்த்தைகளில் ஈடுபட சிறிலங்கா அரசாங்கம் தயாராக இல்லை என கொழும்பில் இருந்து கிடைக்கும் செய்திகள் (8 ஆம் பக்கம் பார்க்க)

## விமானப்படையை பலப்படுத்த அரசாங்கம் தீவிர முயற்சி

(கொழும்பு)

சிறிலங்கா விமானப் படையை விஸ்தரிக்க அரசாங்கம் தீவிரமுயற்சி எடுத்துவருவதாகவும், இதற்கென ரஷ்ய தயாரிப்பான எம். ஐ - 8 ரக ஹெலிகப்டர்களைக் கொள்வனவு செய்யத் தீர்மானித்திருப்பதாகவும் பாதுகாப்பு வட்டார அதிகாரி ஒருவரை மேற்கோள் காட்டி கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

டாங்கிகள், ஹெலிகப்டர்கள் மற்றும் ஆயுதக் கொள்வனவில் கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் பக்கம் சிறிலங்கா அரசின் கவனம் திரும்பியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

1970-ம் ஆண்டுக்குப்பின்னர் சோவியத் தயாரிப்பு விமானங்கள் எதுவும் கொள்வனவு செய்யப்படவில்லை எனச் சுட்டிக்காட்டிய பாதுகாப்பு வட்டார அதிகாரி, 1977-ல் பதவிக்கு வந்த ஜெயவர்த்தனா அரசு மேற்கு நாடுகளில் பல்வேறு ரகவிமானங்கள், உலங்குவானூர்திகள் என்பனவற்றைக் கொள்வனவு செய்தமையையும் குறிப்பிட்டார்.

முதல் தடவையாகச் சோவியத் தயாரிப்பு எம். ஐ - 8 ரக ஹெலிகப்டர்களைக் கொள்வனவு செய்ய அமைச்சரவையின் அனுமதியுடன் பாதுகாப்பு அமைச்சு உள்ளூர், (8 ஆம் பக்கம் பார்க்க)

தொழில் இழந்தவர்களுக்கு

## கடன் பெற்றுக் கொடுக்க அரச அதிபர் முயற்சி

(யாழ்ப்பாணம்)

தொழிலிழந்துள்ளவர்களுக்கு மீளத் தொழில்களை ஆரம்பிப்பதற்கு வங்கிக் கடன்களை பெற்றுக் கொடுப்பதற்கான முயற்சியில் யாழ் அரசாங்க அதிபர் திரு. கா.மாணிக்கவாசகர் ஈடுபட்டுள்ளார்.

நேற்று யாழ். செயலகத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார். மேற்படி கூட்டத்தில் யாழ். மாவட்டத்திற்குட்பட்ட அரச திணைக்களங்கள் மற்றும் அரச சார்பற்ற (8 ஆம் பக்கம் பார்க்க)

கொழும்பில்

## உண்ணாவிரதிகள் மீது பொலிசார் தாக்குதல்

[கொழும்பு]

மனித உரிமை தினத்தன்று கொழும்பில் உண்ணாவிரதமிருக்க முற்பட்ட பொது மக்கள் மற்றும் அரசியல் வாதிகள் மீது பொலிசாரும் ஆயுதம்தாங்கிய குழுவினரும் மேற்கொண்ட தாக்குதலினால் பத்திற்கு மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். அத்துடன் வாசுதேவ நாணயக்கார, மகிந்த ராஜபக்ச ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.

நேற்று கொம்பனித்தெரு டீமெல் மைதானத்தில் காணாமல் போனோரின் (8 ஆம் பக்கம் பார்க்க)

## படகு பறிப்பு

கிளாலிக் கடலில் பொருள்களை ஏற்றிவந்த படகொன்று சிறிலங்கா கடற்படையினரிடம் சிக்கியதாகத் தெரியவருகிறது.

நேற்று முன்தினமிரவு கிளாலிக் கடலில் பொருள்களை (8ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பு மத தலங்களுக்கு இன்று விசேட பாதுகாப்பு

### இந்துக்கோயில்கள் தாக்கப்படலாம் என அச்சம்

(கொழும்பு)

கொழும்பு நகர் உட்பட ஏனைய புறநகர் பகுதிகளில் உள்ள இந்து - முஸ்லிம் வழிபாட்டு தலங்களுக்கு இன்று விசேட பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்படும் என பொலிஸ் தலைமையலுவலக கலவரம் அடக்கும் பிரிவு சிரேஷ்ட அதிகாரி 'லங்காதீப' பத்திரிகைக்கு தெரிவித்துள்ளார்

இந்தியாவில் அயோத்தியில் மசூதி உடைக்கப்பட்டதைத் தொடர்ந்து ஏனைய நாடுகளில் பரவிவரும் கலவரங்கள் கொழும்பில் பதற்ற நிலையை உருவகியுள்ளன ஏற்கனவே மதஸ்தாபனங்களுக்கு பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. இருந்த போதும் வெள்ளிக்கிழமை இரு சாராரும் மத அனுஷ்டானங்களில் ஈடுபடுவ (8 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டுவில், நுணாவில் பகுதிமீது சுப்பர்சொனிக்ரொக்கட் தாக்கு

### 2 பேர் பலி; 15 பேர் காயம்

(தென்மராட்சி)

சாவகச்சேரியில் மட்டுவில் நுணாவில் ஆகிய பகுதிகளில் உள்ள மக்கள் குடியிருப்புகள் மீது சிறிலங்கா விமானப் படைக்குச் சொந்தமான இரண்டு ''சுப்பர் சொனிக்'' குண்டு வீச்சு விமானங்கள் நடத்திய அகோர றொக்கட் தாக்குதலால் இரண்டு பொது மக்கள் கொல்லப்பட்டனர். பதினைந்திற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். அத்துடன் பல வீடுகள், மதில்கள் என்பன சேதமடைந்தன.

நேற்றுக் காலை 8. 15 மணியளவில் தென்மராட்சிப் பகுதியைத் திடீரென வந்துவட்டமிட்ட இரண்டு சுப்பர்சொனிக் குண்டு வீச்சு விமானங்கள் மட்டுவில் தெற்கு, நுணாவில் மேற்கு, மருதங்குளம் ஆகிய மக்கள் குடியிருப்புகள் மீது சுமார் ஆறு தடவைகள் வரை றொக்கட் குண்டுகளை அடுத்தடுத்து வீசின ஒவ்வொரு தடவையும் ஆறுக்கும் மேற் (7 ஆம் பக்கம் பார்க்க)

## விமானத் தாக்குதலால் பரீட்சை குழம்பியது

(யாழ்ப்பாணம்)

'சுப்பர் சொனிக்' விமானங்கள் நடாத்திய குண்டு வீச்சுத் தாக்குதலையடுத்து சாவகச்சேரி பகுதியில் க. பொ. த. (சாதாரணதர )பரீட்சை குழம்பியது.

அப்பகுதி பரீட்சை மண்டபங்களில் அமர்ந்திருந்த மாணவர்கள் 'சுப்பர் சொனிக்' விமானங்களின் தாக்குதலையடுத்து நாலாபுறமும் சிதறியோடினர்.

விமானங்கள் தாக்குதல் நடாத்திவிட்டுச் சென்றதும் (8 ஆம் பக்கம் பார்க்க)

## ஆங்கில தட்டெழுத்தாளர்கள் தேவை

வேலை நேரம் : இரவு 18.00 - 2 00

அநுபவம் வாய்ந்தவர்கள் விண்ணப்பிக்கவும்

விண்ணப்பங்களை 20-12-1992 இற்கு முன்னர் அனுப்பி வைக்கவும்

கணணி அறிவு உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

★ சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு:- விளம்பர இலக்கம்: 180
மே/பா. ஈழநாதம்,
31. மகேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-5572)

## வரி விளம்பரம்

### வாடிக்கையாளருக்கு

தென்மராட்சி மக்களுக்கு டில்காவின் சேவை! உங்கள் கடிகாரங்கள், றேடியோக்கள் யாவும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். சகல பற்றரிகளும் எம்மிடம் உண்டு டில்காவாச் & றேடியோ வேக்ஸ் தென்மராட்சியில்சகல வங்கிகளுக்கு அருகாமையிலும் எமது கிளைகள் உள்ளன. சாவகச்சேரி. (சி- 5560)

### கடிகாரமா? றேடியோவா?

உங்கள் கடிகாரங்கள், றேடியோக்களை உத்தரவாதத்துடன் திருத்திக்கொள்ள எம்மை நாடுங்கள். (சகல கடிகார பற்றறிகளும் எம்மிடம் உண்டு.) தரமான கடிகாரங்கள், றேடியோக்கள் நியாய விலைக்கு விற்றுத் தரப்படும். டில்கா வாச் வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி, (வானவில் கூல்பார் அருகாமையில்) யாழ்ப்பாணம். கிளை: இலங்கை வங்கி அருகாமையில் சாவகச்சேரி. (சி-5510)

### பற்சிகிச்சை நிலையம்

கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு எதிரில். கே. கே. எஸ் வீதி, கொக்குவில் தினசரி 4 பி ப — 6 பி ப ஞாயிறு 10 மு. ப — 2 பி . ப 3231)

### ராசி பலன்

1993 ஆம் ஆண்டு ராசிபலன் பன்னிரண்டு ராசிகளுக்கும் பொதுப்பலன் விலை ரூபா 6/- தொகுப்பு சாலையூரன் சகல புத்தகசாலைகளிலும் கிடைக்கும். (3366)


## திருமணப் பதிவு

தெல்லிப்பழை தெங்கு. பனம்பொருள் சங்கத்தினரின் ஆதரவில் உடுவில், புதுமடம் கர்த்தர் ஆலயப் பகுதியில் சுமார் நூறு குடும்பங்களுக்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை அன்று திருமணப்பதிவு செய்யப்பட்டது,

## கருத்தரங்கு

வண்ணார் பண்ணை வைத்தீஸ்வராக் கல்லூரியில் இன்று மாலை நான்கு மணிக்கு ''பிரித்தானியர் காலம்'' என்னும் தலைப்பிலான கருத்தரங்கு ஒன்று நடைபெறவுள்ளது. விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பின் யாழ். மாவட்டத்தின் யாழ் கோட்டத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இக் கருத்தரங்கில் ஆர்வமுடைய அனைவரும் கலந்து கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## புலமைப் பரிசில் முடிவுகள்

இவ்வருடம் ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகளில் தென்மராட்சிக் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த பாடசாலைகளில் சாவகச்சேரி நுணாவில் அமிர்தாம்பிகை வித்தியாலயம் முன்னணி வகிக்கிறது. இப்பாடசாலையில் இருந்து தோற்றிய மாணவர்களில் பன்னிரண்டு பேர் புலமைப் பரிசிலுக்கு தெரிவாகியுள்ளனர். இத்தவேளை சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் 10 பேரும், சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் 5 பேரும், சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் 5 பேரும் யா/ஏழாலை தெற்கு அமெரிக்க மிஷன் பாடசாலையில் 2 பேரும் மேற்படி புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்றுள்ளனர். மேலும் யாழ். நுணாவில் அமிர்தாம்பிகை வித்தியாலயத்திலும் இப் பரீட்சைக்கு தோற்றியவர்களில் 40 விகிதமானவர்கள் சித்தியடைந்துள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது. (மு)


தென்மராட்சி கிழக்கு ப. நோ. கூ. சங்கம்

## அறிவித்தல்

தென்மராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், கொடிகாமம், தனது 1993 ஆம் ஆண்டிற்கான பொதிகள் ஏற்றுவதற்கான லொறிச் சேவை ரெண்டர் மூலம் கோரப்படுகின்றது விண்ணப்பப் பத்திரம் பிரதம சங்கத்தில் பெற்று பூர்த்தி செய்து 24 - 12 - 92 ஆம் திகதிக்கு முன்பு பொதுமுகாமையாளரிடம் சேரல் வேண்டும்- கேள்விப் பத்திரம் பெறுவதற்கு ரூபா 150/- செலுத்தவேண்டும். இப்பணம் மீளளிக்கப்படமாட்டாது தெரிவு செய்யப்படுபவர் பிணை ரூபா 2500/-செலுத்தி சங்கத்துடன் ஒப்பந்தம் செய்தல் வேண்டும்.

பொதுமுகாமையாளர்
தென்மராட்சி கிழக்கு ப. நோ.கூ.சங்கம்
கொடிகாமம்
8 - 12 - 1992

(சி-5566)

புலிகளின் குரல்

## வெற்றிடங்கள்

புலிகளின் குரல் வானொலி நிலையத்தில் பின்வரும் வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. பிரதம செய்தித் தொகுப்பாளர்
   - ★ தினசரிப் பத்திரிகை ஒன்றில் ஆசிரியராக கடமையாற்றிய அனுபவம் அல்லது இதற்குச் சமனான அனுபவம்.
   - ★ செய்தி தொகுப்பதில் நீண்டகால அனுபவம்
2. நிகழ்ச்சி அமைப்பாளர்
   - ★ கலை, இலக்கியத் துறையில் நீண்டகால ஈடுபாடு.
   - ★ இசைத் துறையில் நீண்டகால ஈடுபாடு.
3. மொழி பெயர்ப்பாளர்
   - ★ ஆங்கில நூல்கள், பத்திரிகைகளை தமிழாக்கம் செய்யும் திறமை
   - ★ சிங்கள மொழி அறிவு மேலதிக தகுதியாக கருதப்படும்.
4. வாத்தியக் கலைஞர்கள்
   - ★ வானொலி நிகழ்ச்சிகளிலும், இசைப்பாடல்களிலும் வாத்தியங்கள் வாசிப்பதற்குரிய திறமை.
   - ★ நீண்டகால அனுபவம்.

ஆரம்ப வேதனம்:

ரூபா 2,500/- இலிருந்து 4,500/- வரை அனுபவம தகுதிக்கேற்ப வழங்கப்படும்.

விண்ணப்பதாரிகள் தங்களது சுய விபரத்துடனான விண்ணப்பங்களை 1992 - 12 - 15-ம் திகதியன்றோ அதற்கு முன்பாகவோ எமக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்க வேண்டும்.

பொறுப்பாளர்
புலிகளின் குரல்
திருநெல்வேலி

(சி-5551)

## 4-ம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 09 | 08 | 1969



மறைவு 11 | 12 | 1988

### வீரசிங்கம் சிவதாசன்

அமலனடி சேர்ந்தின்று ஆண்டு நான்காகிறது அன்பான மொழிபேசி மகிழ்வித்தீர் இவ்வுலகில் எங்கிருந்தபோதும் எங்கள் உள்ளம் உன் நினைவாகவே ஏங்கித் தவிக்கிறதே எம் மகனே!

அன்பின் நினைவுகூர
அப்பா, அம்மா, சகோதரர்கள்.

நவாலிவடக்கு,
மானிப்பாய்.

(3773)


# புலிகளுடன்பேச்சுவார்த்தை செய்தியில் உண்மையில்லை

விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை எதுவும் நடத்தப்படவில்லை என்று சிறிலங்கா அரசாங்கம் உத்தியோக பூர்வமாக அறிவித்துள்ளது.

விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடந்து வருகிறது என்றும், போர் நிறுத்தம் ஏற்படும் சூழல் இருக்கிறது என்றும் சென்னையிலிருந்து வெளியாகும் இந்துப் பத்திரிகையை மேற்கோள் காட்டி திவயின நேற்று செய்தி வெளியிட்டிருந்தது

இச் செய்திக்கு மறுப்புத் தெரிவிக்கும் விதமாக சிறிலங்கா அரசாங்கம் உத்தியோக அரசாங்கம் அறிவிப்பு பூர்வமாக விடுத்த அறிவிப்பில் மேலும், இச் செய்தி முற்றிலும் தவறானது என்றும், விடுதலைப் புலிகளுடன் எந்த விதமான பேச்சுவார்த்தைகளும் நடத்தப்படவில்லை என்றும், வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்கு தீர்வு காண பாராளுமன்றத் தெரிவுக்குழு எடுக்கும் முடிவுகளுக்கு ஏற்பவே அரசாங்கம் நடந்து கொள்ளும் என்றும், இராணுவ நடவடிக்கை எதுவும் மட்டுப்படுத்தப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழ் உத்தியோக மொழியா; நாம் காண்பது என்ன?

(கொழும்பு)

''தமிழும் உத்தியோக மொழிகளில் ஒன்று என்று அரசாங்கமும் எமது அரசியல்வாதிகளும் கூறுகிறார்கள், ஆனால் நடப்பது என்ன?'' இவ்வாறு மனம் புழுங்கிய நிலையில் தமிழ் வர்த்தகர் ஒருவர் கேள்வி எழுப்பியிருக்கிறார்.

தமிழ் மொழி மட்டும் தெரிந்த கொழும்பு நகரத்தைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவர் தமது வர்த்தக நிலைய அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான விண்ணப்பப்படிவம் தமிழ் மொழியில் இல்லாதது குறித்தே கவலை தெரிவித்தார்.


## நினைவு கூருகின்றோம்...

### 1992-12-11

1984-ம் ஆண்டு இதேதினத்தில், சிறிலங்காப்படையினரால் படுகொலை செய்யப்பட்ட பண்டத்தரிப்பு, சண்டிலிப்பாய் வீதியைச் சேர்ந்த தமிழ்ப்பொதுமகன்.

1987-ம் ஆண்டு சுன்னாகம் - மயிலணிப்பகுதியில், இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

**சங்கர்/விக்கி** (தங்கராசா விக்னேஸ்வரராஜ்-அம்மன் வீதி; உடுவில் வடக்கு சுன்னாகம் -யாழ்)

1988-ம் ஆண்டு வந்தாறுமூலை, சிவத்தப்பாலம் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

**2-ம் லெப். கெனடி** (சேகரம்பிள்ளை கஜேந்திரன்- கறுவாக்கேணி, வாழைச்சேனை-மட்டு)

1989-ம் ஆண்டு மட்டு தன்னாமுனைப்பகுதியில், தேசவிரோதிகளுடனான சமரில் வீரச்சாவெய்திய-

**தோத்திரன்/சமுத்திரன்** (தவநாயகம்-சந்திவெளி, முறக்கொட்டாஞ்சேனை-மட்டு)

**கப்டன்றீகன்** (சின்னக்குட்டி கந்தசாமி-கோரக்கல்லிமடு, கிரான்-மட்டு)

1990-ம் ஆண்டு ஊர்காவற்றுறைப்பகுதியில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் எமைப்பிரிந்த

**லெப். கரிகரன்** (கார்த்திகேசு புலேந்திரன்-நுணாவில் கிழக்கு சாவகச்சேரி. யாழ்)

மட்டு - ஏறாவூர்ப் பகுதியில் இராணுவத்தால் சுட்டுக்கொல்லப்பட்ட மட்டு - தவைாய் வாசியான தமிழ் இளைஞன்.

அம்பாறை மற்றும் காரைதீவுப் பகுதியினைச் சுற்றிவளைத்த சிறிலங்கா அதிரடிப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 3 தமிழர்கள்.

1991 ஆம் ஆண்டு மட்டக்களப்பு சிவத்தப்பாலம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய

மட்டு - அம்பாறை அரசியல் பிரிவுப் பொறுப்பாளர்

**கப்டன் சத்துருக்கன்** (செல்லப்பா கிருபைராசா - பொத்துவில் அம்பாறை)

**பிரசாந்தன்** (கந்தசாமி சங்கர் - ஏறாவூர், மட்டு)

**கண்ணாடி ராஜா / பாண்டியன்** (பெரியபிள்ளை நடராஜா - இருதயபுரம், மட்டு)

**மேஜர் வேணு** (பொன்னுத்துரை வேணுதாஸ் - திருக்கோணமலை வீதி, மட்டு)

மன்னார் - வேப்பங்குளம் பகுதியில். சிறிலங்கா இராணுவத்தினரின் கண்ணிவெடியில் சிக்கியதில் வீரச்சாவெய்திய

**மேஜர் தமிழ்ப்புலி / றிச்சாட்** (முத்துசாமி தர்மராசா - பெரியபுல்லுமலை)

**லெப். இனியன் / றஸ்கின்** (முத்தையா இராமசாமி - தூத்துக்குடி, இந்தியா)

**லெப். கிருபா** (அருளானந்தம் அமுதன் -தாராபுரம் மன்னார்)

**குமாரன்** (தங்கவேல் சுகுமார் - தேவிபுரம் பூநகரி)

**புண்ணியன் / அல்போன்ஸ்** (சீமான் கிறிஸ்டி தேவன் - செட்டிவேளாங்களம், மன்னார்)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

[சி-5564]

இது சற்று வித்தியாசமான வரலாறு. எங்கள்போராட்டப் பாதையெங்கணும் ஆகுதியாகிவிட்ட ஆயிரக்கணக்கான மாவீரர்களில் இவர்கள் முற்றிலும் வித்தியாசமானவர்கள். இந்த மண்ணில் பிறந்து தவழ்ந்து. வாழ்ந்து வளர்ந்த எங்கள் உடன்பிறப்புக்கள் கூட இந்த விடுதலைப்போருக்கும் தமக்கும் சம்மந்தமே இல்லை என்றுஅன்னியப்பட்டு நிற்கின்ற எங்கள் தாயகத்தின் இழிநிலை. அவர்களையெல்லாம் வெட்கித் தலைகுனிய வைக்கும் இந்தச் சோதரர்கள் வரலாறு. எங்கள் தாயக விடுதலைப் போரில் தம் பங்களிப்பைச்செலுத்தவேண்டும் என்ற கட்டாயம் இவர்களுக்கு இருக்கவில்லை. விடுதலையின் வரலாற்றுப் பதிவேட்டில் தம் பெயர் பதிக்கவேண்டும் என்ற தேவையும் இவர்களுக்கு இருக்கவில்லை. நாம் அன்னியப்பட்டு நிற்கின்றோமே என்று வெட்கப்பட வேண்டிய அவசியம் கூட இவர்களுக்கு இல்லை. இவ்வளவும் இவர்களுக்கு ஏன் இல்லையென்றால். இவர்கள் எங்கள் இனம், மொழி -இவை இரண்டிற்கும் அப்பாற்பட்டவர்கள். இவர்கள் பிறந்தது எங்கள் இனத்தில் அல்ல. இவர்கள் பேசியது எங்கள் மொழியும் அல்ல. சந்தர்ப்பவசத்தால் இவர்கள் வாழ வேண்டியேற்பட்டது மாத்திரம் தான் எங்கள் பூமியில். ஆம். இவர்கள் பறங்கி இனத்தைச்சேர்ந்தவர்கள். எங்கள் போராட்டமானது தமிழ் இனத்தின் விடுதலைக்கானது மட்டுமன்று எங்கள் மொழியின் விடுதலை என்பதும் அதனோடு பின்னிப் பிணைந்து விட்ட ஒன்று.

ஆனாலும் இனம், மொழி இவையிரண்டிற்கும் அப்பாற்பட்டு எங்கள் போராட்டத்தின் பால் ஈர்க்கப்பட்டவர்கள் பலர். அப்படிப்பட்ட தனித்துவமான போராட்டப் பற்றை ஊட்டிய பெருமை எம் தலைவருக்குண்டு. அதனைத் தெளிவாக்குகின்ற உதாரண புருசர்களாய் எங்களோடுஆழமாகப் பின்னிப்பிணைந்து ஒன்றாகி விட்ட சில உயர்ந்த உள்ளங்கள் • அதில் இவர்கள் இருவர்.

சபேசன்......கில்பட் ...அன்புச் சோதரர்கள். ஆழமான பாசப் பிணைப்பில் கட்டுண்டவர்கள். திருமலை மண்ணில் எழில் கொஞ்சும் கிராமங்களில் ஒன்றான சாம்பல்தீவில் இவர்கள் வாழ்ந்து வந்தார்கள். ஆனாலும் இவர்கள் பிறந்த மண் என்பதோ, வாழ்ந்த பிரதேசமென்பதோ இவர்களின இனத்தின்இயற்கையான சாயலில் எந்தவிதமான மாற்றத்தையும் ஏற்படுத்தியிருக்கவில்லை. சிவந்த உடல்; செம்பட்டைத் தலைமயிர்; பூனைக் கண்கள் - இவர்களின் உடலில் இயற்கையாகவே இழையோடி இருந்த இனத்தின் சாயல் திக்கித் திக்கிப் பேசுகின்ற கொச்சைத்தமிழ். ஆனாலும்அதனை ஒழுங்காகப் பேச முயற்சிக்கின்ற ஆர்வம் இதுதான் இவர்கள்... இனம், மொழி என்ற வார்த்தைகளுக்கு அப்பாற்பட்டு நின்று எங்கள் போராட்டத்தின் பால் ஈர்க்கப்பட்டு அதனால் தங்கள் சுகபோக வாழ்வினைத் தியாகம் செய்து போராட்டத்தோடு தம்மை நெருக்கமாகப் பிணைத்துக் கொண்டவர்கள். இவர்கள் வாழ்ந்து வந்த பிரதேசம்; அந்தப் பிரதேசத்தின் சூழ்நிலை; ஆதிக்கச் சிங்களத்தின் அராஜகத்தை நிதர்சனமாக அனுபவிக்க நேர்ந்தமை; அவற்றைப் பொறுத்துக்கொள்ள முடியாத இவர்களின் மனநிலைமை - இதுவே இவர்களை இயக்கத்தில் இணைய வைத்த காரணங்களாக இருந்திருக்கும். ஏனென்றால் தேவை, கட்டாயம், பொறுப்பு, கடமை ஆகியநிலைகளுக்கு அப்பாற்பட்ட இவர்களுக்குபோராட்டத்தில் இணைந்து கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் வேறேதும் இருந்திருக்க நியாயமில்லை. அதனால் தானோ இவர்கள் எங்கள்இதயங்களில் ஆழமாகப் பதிந்து விட்டார்கள்?

இருவரில்மூத்தவன்சபேசன். அதனால் தானோ என்னமோ தன் தம்பிக்குவழிகாட்டுபவன் போன்று 1985 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் அவன் தன்னை இயக்கத்தில் இணைத்துக் கொள்கின்றான. அவன் இயக்கத்தில் இணைந்து கொண்ட காலப்பகுதி .. திருமலை மண்ணில் எமது இயக்கம் ஆழமாக வேரூன்றியிராத நேரம் இரவு நேரங்களில் தான் ஊருக்குள் எங்கள் நடமாட்டம். மற்றைய பொழுதெல்லாம் கானகத்தில் மறைநது திரிகின்ற நேரம்- மறைமுகமானஎங்கள்நடமாட்டம்ஆனாலும் இயககத்தில்இணைவதுஎனறு உறுதிகொண்டு விட்ட அவனுக்கு இவையெல்லாம் ஒரு தடைக்கல்லாக அமைந்து விடவில்லை. அதனால் எப்படியோஒரு தொடர்பை ஏற்படுத்தி அவன் இயக்கத்தில் இணைந்து கொண்டதில் வியப்பொன்று மில்லை.



அவன் இயக்கத்தில் இணைந்து எங்கள் பாசறைக்கு வந்த அந்த ஆரம்ப நாட்கள். அன்று அவனோடு இருந்த எவருக்கும் என்றுமே மறக்க முடியாத நினைவுகள். அவனது தோற்றம் -ஆம வஞ்சகமற்ற இயற்கையானது அவனது இனத்தின் சாயலில் எந்த ஒரு மாற்றத்தையும் ஏற்படுததியிருக்கவில்லை. அவன்அவர்களைப் போன்றவனாகவே இருந்தான். அவனைக்கண்டவுடன் எங்கள் எல்லோருக்கும் ஆச்சரியம் ஆச்சரியப்படவேண்டிய விடயம்தான் போராட வேண்டிய கட்டாயம் உள்ளவர்கள் எல்லாம் தாமுண்டு தம் பாடுண்டு என இருக்கும்போது இவனோ . ஆனால் எங்களில் ஒருவனாக அவன் பின்னிப்பிணைந்து விட்டான்.

சபேசன் உறுதியின் உறைவிடம். எந்த ஒரு இக்கட்டான சூழ்நிலையிலும் அவன் தனது உறுதி நிலையில்தளர்ந்ததுநாங்கள் கண்டதே இல்லை அவன் பங்குபற்றிய தாக்குதல்கள், எதிர்பாராத விதமாக அருகருகே இராணுவத்தினரை எதிர்கொண்டு மோத வேண்டி ஏற்பட்ட சந்தர்ப்பங்கள் - அப்பொழுதெல்லாம் சற்றேனும் பதற்றமின்றி. தனது உறுதி நிலையில் சிறிதளவேனும் தளர்வின்றிசெயறபட்டு தனது திறமையை வெளிக்காட்டிக் கொண்டவன் சபேசன் அவனது எண்ணங்கள் அசைவுகள், செயல்கள்- ஒவ்வொருசந்தர்ப்பத்திலும்அது மற்றவர்களுக்கு வழிகாட்டுவதாகவே இருக்கும் சோம்பல், சோர்வு, இயலாமை. அலட்சியம்- சபேசன் என்ற அகராதியில் நாம் என்றுமே சந்தித்திராத வார்த்தைகள். எந்த ஒருவேலையைக்கொடுத்தாலும் அதனை எவ்வளவு கஷ்ரப்பட்டாவது செய்து முடிக்க வேண்டும் என்ற ஆர்வம-அது அவனது இயற்கையான சுபாவம். அவன் எங்கு சென்றாலும், எந்த முகாமில் நின்றாலும் ஏதாவது ஒரு வேலை செய்து கொணடேயிருப்பான். ஒரு கணப்பொழுதேனும் சுமமாயிருப்பது என்பது அவனால் முடியாத விடயம்.

சபேசன் அவன் ஒரு திறமையான மெக்கானிக். அதனால் அவன் எங்கள் எல்லா முகாம்களுக்குமே தேவையானவனாந் இருந்தான். கானகத்தில்இருகதஎந்த ஒரு முகாமிலும் ஜெனரேற்றர்கள், ரக்ரர்கள் மற்றும் எதுவானாலும் சரி- பழுதடைந்துவிட்டால் அங்கேஅவன் தேவைப்படுவான். ஒரு இடத்தில் நிற்கும் அவன் மறுகணம் வேறோர்இடத்தில்- வாகனம் அவனது சிவந்த பாதங்கள் ஆனாலும் அந் நேரங்களில் அவன் சோர்வடைவதோமறுப்பதோ -உண்மையில் நாங்கள் என்றுமே அறிந்ததில்லை. தனது அதிகமான நேரத்தை மெக்கானிக் வேலைகளிலேயே அவன் செலவழிப்பான்.

நாங்கள் சோர்வடைந்திருக்கும் நேரங்கள் வேலையேதும் இல்லாவிட்டால்ஒன்றாகக்கூடியிருந்து அரட்டை அடிக்கினற கணப்பொழுதுகள் அங்கு சபேசனும் நின்றுவிட்டால் .. அவன் திக்கித் திக்கிப் பேசுகின்ற கொச்சைத் தமிழ் அதனைக்கேலி

## அன்புச் சகோதரர்கள்



2-ம் லெப். சபேசன்



லெப். கில்பட்

செய்து அவனைச் சீண்டுவதே தோழர்களின் வேலையாகி விடும் ஆனாலும் சபேசன் மிதந்த முற்கோபக்காரன் கோபம் வந்து விட்டால் அவனைச் சகஜ நிலைக்குக் கொண்டு வருவது என்பது பெரும்பாடாகிப் போய் விடும். இருந்தாலும் அவனை அறிந்த எல்லோரும் அதனைப் புரிந்து கொள்வார்கள் அதனால் அவனுக்குக் கோபம் வரவைப்பது என்பதே தோழர்களின் பொழுது போக்காகி விடும். அவனுக்கு கோபம் வரவைப்பதற்கு விஷேசமான காரணங்கள் ஏதும் தேவையாக இருக்கவில்லை. ஏனென்றால் சபேசன் இயற்கையாகவே மிகுந்தகூச்ச சுபாவமுடையவன் அவன் உடலில் யாராவது தொட்டு விட்டால்சரி துள்ளிவிழுவான். மறுகணம் தொட்டது யாராக இருந்தாலும் சரி, வேண்டுமென்றே தொட்டிருந்தாலும் சரி, தவறுதலாகப் பட்டிருந்தாலும் சரி தொட்டவர் அடி வாஙகியே தீருவார்: அதற்காக நாங்கள் அவன் மீது கோபிப்பதோ. ஆத்திரப்படுவதோ கிடையாது. ஏனென்றால் எங்களுக்கு அவனைத் தெரியும் வேண்டுமென்றே அவனைத் தொட்டுவிட்டு ஓடுவதும்; தொட்டவனை அவன் துரத்துவதும்; கோபத்தில் கொச்சைத் தமிழில் அவன் பேசுவதும் எங்கள் நெஞ்சங்களில் நிலைத்து விட்ட நினைவுகள்.

இத்தனைக்கும் மத்தியில் அவன்பங்கு கொண்ட தாக்குதல்கள்... அவற்றிலெல்லாம் தனது திறமையைக் காட்ட அவன் தவறுவதே இல்லை. ஆனாலும் அன்று .. 1986 ம் ஆண்டு எங்கள் நெஞ்சங்களைவிட்டு அகல மறுக்கின்ற அந்த நாள்... காட்டிலே இராணுவத்தினர் இறங்கி விட்டார்களாம். எங்கள் அனைவரையும் உசார்ப்படுத்திவிட்ட அந்தச் செய்தி அந்நேரம் முகாமில் நின்ற சபேசன்... அப்படியொரு செய்தியைக் கேள்விப்பட்ட பின்பும் அவன் முகாமில் நிற்பதென்பது .. தனது சக போராளிகளுடன் சேர்ந்து இராணுவத்தினர் இறங்கியுள்ளதாகக் கூறப்பட்ட காட்டுப்பகுதியை நோக்கிப் புறப்பட்டு விட்டான் அவன்.

முன்பொரு காலம் அந்தக் கானகம் அவனுக்குப் புதியது. ஆனாலும, இன்று அந்தக் கானகத்தின் ஒவ்வொரு மரங்களையும் அவனுக்குஅடையாளம் தெரியும். காட்டின் பகுதிகளை அவதானித்த வண்ணம் முன்னேறிக் கொண்டிருந்த சபேசனும், அவன் தோழர்களும் எதிர்பாராத விதமாக இராணுவச் சுற்றிவளைப்பில் சிக்குண்டு... கடுமையான தாக்குதல். சபேசன் -அந்தஉறுதியின் உறைவிடம் எதிரியைநோக்கித் தனது துப்பாக்கியை இடைவிடாது இயக்கிக் கொண்டிருந்த நேரம் ..... அந்தோ!! அவன் காயமடைந்து விட்டான். அப்பொழுதும் சற்றேனும் உறுதி தளராது தொடர்கின்ற அவனது தாக்குதல். இராணுவக் சுற்றிவளைப்பில் இருந்து வெற்றிகரமான பின் வாங்கலுக்கான கடுமையான முயற்சியில் அவனது தோழர்கள் ஆனாலும் சுற்றிவளைப்பின் இறுக்கத்தில் சபேசன். இராணுவத்தினரின்தொடர்ச்சியான கடும் தாக்குதல். தப்ப முடியுமா எனும் சந்தேகத்தோடு இவன் ..விளைவு... தனது கழுத்தில் தொங்கிய சயனைட்டை உட்கொண்டு அவன் சாவை அணைத்துக் கொண்ட அந்தச் சோகம முடிவில் எமக்குக் கிடைத்தது அவனது உயிரற்ற உடல் மாத்திரம்தான். இப்பொழுது தோழர்களின் தோள்களில் சுதந்திரமாகச் சபேசன் .. .. தனது புதைகுழியைநோக்கி .. ஆனாலும் அங்கு துள்ளல் இல்லை, துவளல் இல்லை. ஏனென்றால் அவன் உயிரோடு இல்லை ..

எங்களோடு ஒன்றிப்போன அந்த உயர்ந்த அன்புள்ளம். அனறு எங்களோடு இல்லை. ஆனாலும் அந்த உணர்வு மாத்திரம் எங்களுக்கு ஏற்படவில்லை. அதற்கு இன்னமும் நீண்ட நாட்கள் தேவைப்படலாம். ஏனென்றால் அவன் எங்களுக்காக விட்டுச் சென்றது தனது இனிமையான நினைவுகளை மாத்திரமன்று. தனது அன்புச் சோதரனையும் தான். ஆம். 'கில்பட்' - இந்தத் தம்பி அண்ணனின் பாதையைப் பற்றி... அவன் இருக்கின்றபோதே இவனும் இயக்கத்தில் இணைந்து கொள்கின்றான். ''மச்சான்! விசயம் தெரியுமே. உன்ர தம்பியும் இயக்கத்திற்த வந்திற்ரானாமடா.'' யாரோ ஒரு நண்பன் சபேசனிடம் கூறியபொழுது ஆச்சரியமான சிரிப்புடனேயே அதனை ஏற்றுக் கொண்ட அந்த உயர்ந்த உள்ளம்.

'கில்பட்' - தோற்றத்திலும் சரி குணாதிசயத்திலும் சரி, ஒவ்வொரு அசைவுகளிலும் சரி - தன் சோதரனை அப்படியே உரித்து வைத்தாற் போன்றிருந்தான். ஆனாலும் இவன் ஒவ்வொரு செயற்பாட்டிலும் தனது அண்ணனையும் மிஞ்சி விட்டவன். கில்பட்டை நினைக்கும்போதெல்லாம் அவனது தோழர்களுக்கு நினைவில் வருகின்ற அந்த சிரிபபூட்டும் சம்பவம்... கில்பட் கதைக்கத் தொடங்கினால் அது ஒரு சிரிப்பூட்டும் நிகழ்ச்சியாக மாறிவிடும். தமிழ் என்பது அந்த ஆரம்ப நாட்களில் அவனுக்கு சுத்த சூனியமாகவே இருந்தது. அவன் பேசுவது அரைகுறை கொச்சைத் தமிழ். தமிழில் மரியாதைக்காகப் பாவிக்கப் படுகின்ற 'நீங்கள்', 'வாங்கள்', 'போங்கள்' - இவையெல்லாம் அவனுக்குத் தெரியாது. இதனால் அவன் கதைக்கத் தொடங்க தோழர்கள் கேலி பண்ணத் தொடங்கி விடுவார்கள். இப்படியாக ஒருநாள் .. அன்று புலேந்தி அம்மான் யாழ்ப்பாணத்தில் இருந்து வருகின்றார். சில வாரங்களுக்கு முன்னர் அங்கு சென்றிருந்த அம்மான் அன்று தான் திரும்பி வருகின்றார். அதனால் அம்மானின் வரவை எதிர்பார்த்து கடற்கரையின் கடும் குளிரிலும், இருளிலும் நிற்கும் போராளிகள் அவர்களோடு கில்பட். அவனுக்கு இன்னும் அம்மானைத் தெரியாது. அன்றுதான் முதன் முதலாகக் காணப் போகின்ற ஆவல் அவன் உள்ளத்தில். வண்டி கரையேறி ஆரவாரச் சிரிப்புடன் அம்மான் இறங்குகின்றார் அமமானோடு இன்னும் பலர். இறங்கிய பலரில் அம்மானை அடையாளம் காணத் துடிக்கும் கில்பட். '':இதுதான் மச்சான் புலேந்தி அம்மான்'' அம்மானைக் காட்டி யாரோ ஒரு நண்பன் கில்பட்டிடம் கூற; தவிர்க்க முடியாத ஆர்வ மிகுதியால் கில்பட் உரத்த குரலில் ''இவன்தானா புலேந்தி எனறு கத்த'' அதைக் கேட்டு தோழர்கள் விழுந்து விழுந்து சிரிக்க; விசயம் தெரியாமல் அம்மான் விழிக்க; யாரோ ஒருபோராளி அம்மானிடம் விசயத்தைச் சொன்னபோது அம்மான் அட்டகாசச் சிரிப்போடு அன்போடு அவன் முதுகில் தட்டிக் கொடுக்க - அங்கே அப்பாவித்தனமான கில்பேட். அவனுக்குத் தமிழ் பேசத் தெரியாது தான். ஆனால் அவன் அதன் மீது கொண்ட பற்று ...

இந்திய ஆக்கிரமிப்புப் போர் ஆரம்பித்துவிட்ட நேரம் திருமலையில் மிகவும் நெருக்கடியான நிலைமை. அங்கு மக்கள் வாழ்ந்திநந்த பகுதியெங்கணும் இந்திய ஒநாய்கள் சூழ்ந்திருந்தன. காடுகளுக்குள்ளே நாங்கள். அந்தக் காலங்கள் தான் எவ்வளவு துன்பமானது. எவ்வளவு கொடியது மிதந்த உணவுத் தட்டுப்பாடு. நாளாந்தம் உணவுதேடுவதே வேலையாகிப் போன நிர்ப்பந்தம். அங்கு வாழ்வது என்பதே போராட்டமாகிப் போய் விட்ட காலங்கள். ஆனாலும் இவையெல்லாம் எங்கள் உறுதிக்தும் இலட்சியத்திற்கும் உரம் போட்டவண்ணமேயிருந்தன. இந்த நெருக்கடியான

(6 ம் பக்கம் பார்க்க)

# போதி சத்துவரும் இருநூறு ஆடைத் தொழிற்சாலைகளும்

நிலாந்தன்

கலியுகத்தில் போதிசத்துவர் கொழும்பின் புறநகர்ப் பகுதியில் அழுக்கான சேரியொன்றில் பிறந்தார். தெருச் சண்டியர்கள் விபச்சாரிகள், கசிப்புக் காச்சுவோர் போன்றோரின் குடியிருப்பாகத் திகழ்ந்த அந்த நெரிசலான சேரியில் போதிசத்துவரின் தந்தையார் சில சைக்கிள்ரிக்ஷாக்களை வைத்திருந்த, தீங்கற்ற சிறு முதலாளியாகஇருந்தார். போதிசத்துவர் குழந்தையாக இருந்தபோது ஒரு நாள் அவருடைய அங்க அடையாளங்களையும் கைரேகைகளையும் நுட்பமாக ஆராய்ந்த சோதிடர் ஒருவர் இக்குழந்தை பின்னாளில் நாட்டின் மன்னராக வரும் என்று கூறினார். எப்பொழுதும் எதிரிகளால் முற்றுகையிடப்பட்ட ஆனால் வெல்லப்பட முடியாத ஒரு மன்னராக போதிசத்துவர் திகழ்வார் என்றும் கூறிய சோதிடர் போதிசத்துவரின் இரு புயங்களிலும் காணப்பட்ட புதிரான மச்சங்களைக் குறித்து எதுவும் கூறமறுத்து விட்டார். அவ்விரு மச்சங்களிலும் இடது புயத்தில் காணப்பட்டது. ஒரு வீட்டைப்போலிருந்தது. மற்றது ஒரு தையல் மெசினைப் போலிருந்தது கலியுக போதிசத்துவர் இவர்என்பதால் கலியுகத்துக்கேயான நூதன அடையாளங்களோடு தோன்றியிருக்கிறார் என்றும் ஆனால் சோதிட சாஸ்திரவிதிகள் பெரும்பாலும் கலியுகத்திற்கும் முந்தியவைஎன்பதால் மேற்படி மச்சங்களின் பலன்களைக் கூறுவது கடினம் என்றும் சோதிடர் கூறிவிட்டார்.

போதிசத்துவர் தனது பாலபருவத்திலேயே தலைமைப் பண்புகளை வெளிக்காட்டினார். தனதுசகாக்களுக்கிடையில் பூசல்கள் நேரும்போது அவர்களைச் சமாதானப்படுத்தினார். சேரிகளை மகிமைப்படுத்த வந்துதித்த குழந்தை இதுவென அச்சேரி வாசிகள் அவரைப் புகழ்ந்தார்கள். போதிசத்துவர் இளைஞராக வளர்ந்தார். கேட்பவர்களை வசீகரிக்கும் பேச்சாற்றல் அவரிடமிருந்தது. அவர் நிறையக் கதைகள் சொன்னார். சண்டியர்களையும் கசிப்பு வியாபாரிகளையும் சகஜ வாழ்க்கைக்குத்திரும்பும்படிபோதித்தார் இளைஞர்களைத்திரட்டி சிரமதானங்களில் ஈடுபடுத்தினார். அவர்கள் சேரிகளைச் சுத்தப்படுத்தினார்கள் கசிப்பு மையங்களை இல்லாதொழித்தார்கள். சேரிவாசிகளுக்கென இராப்பள்ளிகளை ஆரம்பித்தார்கள்... இவ்விதமாக விரைவில் போதிசத்துவர் சேரிகளுக்கெல்லாம் தலைவராகிவிட்டார். சண்டியர்கள் அவருடைய சொற்கேட்டார்கள், அவரைத் தங்களுடைய தலைவன் எனக் கூறுவதில் பெருமகிழ்ச்சியடைந்தார்கள்.

இந்நாட்களில்தான் போதிசத்துவரின்அரசியற் பிரவேசம் நிகழ்ந்தது. முதலில் சேரிகளின் பிரதிநிதியாக அவர் அரசியலில் தயக்கத்தோடு அடி எடுத்து வைத்தார். ஆனால் விரைவில் சேரிகளின் சண்டித்தனங்களிற்கும் தம்மதுவீபத்தின் அரசியலிற்கும் இடையில் வித்தியாசங்கள் அதிகமில்லை என்பதைஅவர்கற்றுத்தேர்ந்து விட்டார்.பிறகென்ன? போதிசத்துவர் அரசியலில் படிப்படியாக,நிதானமாக வைராக்கியத்தோடு முன்னேறலானார். அரசியலில் அவரை எதிர்த்த சண்டியர்களைவிடவும் அவர் தலைமைதாங்கிய சண்டியர்கள் பொல்லாதவர்களாகக் காணப்பட்டார்கள். எனவே ஒரு நாள் போதிசத்துவர் நாட்டின் மன்னராகிவிட்டார்..

போதிசத்துவரிற்கு முன்பு நாட்டை ஒரு கிழநரி ஆண்டு வந்தது. கிழநரி தன்னையும் ஒரு போதிசத்துவர் என்று கூறிக் கொண்டது. கிழநரிக்கு இப்பொழுது 86 வயதாகிறது. அது விஸ்கியும் அருந்திக் கொண்டு பரிநிர்வாணம் அடையும் மார்க்கம் ஏதும் புத்தருடைய போதனைகளில் உண்டா என்பது பற்றிய ஆராய்ச்சியில் இப்பொழுது ஈடுபட்டுள்ளது. கிழநரி ஆறில் ஐந்து பெரும்பான்மையோடு மன்னனாக இருந்த காலத்தில் அரசியலமைபபுச் சட்டத்தில் தான் செய்த எண்ணிலடங்காத் திருத்தங்களோடு திருத்தமாக ஒரு திருத்தத்தைக் கொணர்ந்து அதன் மூலம் அட்டசீலங்களில் இருந்து கொல்லாமை, மது அருந்தாமை போன்றவற்றை நீக்காமல் விட்டதிற்காக இப்பொழுது கவலைப்படுகிறது. கிழநரி ஒரு கிரிக்கெற் பிரியன். போதிசத்துவரோ ஒரு ஃபுட்போல் பிரியன். விளையாட்டிலிருந்து அரசியல் வரை சகலவற்றிலும் கிழநரிக்கும் போதிசத்துவரிற்கும் இடையில் வர்க்கபேதம் நிலவியது. ஒரு வருடத்திற்கு முன்பு கிழநரியின் விசுவாசிகளும் கிரிக்கெற் பிரியர்களுமான சில கழுகுகள் போதிசத்துவ ஆட்சியை எதிர்த்துக் கலகத்தில் இறங்கின. ஆனால் போதிசத்துவர் கலகங்களிற்கு மிரள்பவர் அல்லவே? கலியுகத்தில் போதிசத்துவராக இருத்தல் என்பது எல்லாக் கலகங்களிற்கும் தலைமை தாங்குவதுதானே? சில வருடங்களிற்கு முன்பும் நாட்டில் இளஞ்சிங்கங்கள் கலகம் செய்தன. போதிசத்துவர் கலங்கவில்லை. ஒவ்வொரு சிங்கத்திற்கும் ஒரு எரியும் ரயரை மாலையாகத் தந்ததின் மூலமோ அல்லது சிங்கங்களை ஆறுகளில் மீன்களுக்கு தீனியாகப் போட்டதின் மூலமோ கலகத்தை நசுக்கிவிட்டார். கழுகுகள் விசயத்திலும் அவர் சமீபத்தில் ஒரு கழுகின் காலை உடைத்துவிட்டார்.

இத்தனைக்கும் போதிசத்துவர் இரக்கமற்றவா என்பதோ எதிரிகளை மன்னிக்காதவர் என்பதோ அல்ல. தனக்கு முன்பிருந்த ஏனைய போதிசத்துவர்களைப் போலவே இவரும் கருணை மிகுந்தவர் பக்திமயமானவர். பிராணிகளை நேசிப்பவர். அவருக்குப் பூனைகள் என்றால் உயிர். அதிலும் கறுப்புப் பூனைகள் எனறால் மிகவும் விருப்பம். அவருடைய அரண்மனையில் நிறையக் கறுப்புப் பூனைகள் வளர்க்கப்படுவதாக நாட்டு மக்கள் நம்புகிறார்கள். இக்கறுப்புப் பூனைகள் இரவுகளில் இலக்கத் தகடில்லாத வாகனங்களில் இரை கொள்ளச் செல்பவை என்றும், இருளில் பழிவாங்கும் வெறியுடன் மினிரும் வைரங்களையொத்த விழிகளையுடைய இப்பூனைகள் சத்தமெழாது பாய்ந்து இரைகளைப் பிடித்துச் செல்பவை என்றும் மக்கள் கதைத்துக் கொள்கிறார்கள். கறுப்புப் பூனைகளையும், மலையாள மாந்திரீகர்களையும் அவர் தனது அரண்மனையில் வைத்திருக்கும் வரை அவரை வீழ்த்துவது கடினம் என்றும் மக்கள் நம்பிபுறார்கள்..

(2)

இதுவரையிலும் நாம் போதிசத்துவரின் தோற்றம், வளர்ச்சி பெருமைகளைக் கண்டோம். போதிசத்துவரின் சுயசரிதத்தை மட்டும் கூறுவது இப்பத்தியின் நோக்கம் அல்ல. கலியுகத்திலே போதிசத்துவ அவதாரத்தின் நோக்கம், சிறப்புக்கள் பற்றியும், போதிசத்துவ ஆட்சியில் கலியுகத்தில் தம்மதுவீபத்தின் கதி என்னவயிருக்கும் என்பது பற்றியும் வாசகர்களிற்கு சுருக்கமான ஒரு அறிமுகத்தைத் தருவதும் இப்பத்தியின் நோக்கம்தான்

கலியுகத்தில் போதிசத்துவர் ஒருவரிற்கு இருக்கக்கூடிய அடிப்படைத் தகுதிகள், குணநலன்கள் குறித்து ஏற்கனவே தீர்க்கதரிசிகள் கூறியிருக்கிறார்கள். அவற்றுள்சில வருமாறு:

(1) கறுப்புப் பூனைகளின் பிதாவாயிருப்பது.
(2) மாந்திரீகர்கள். பூசாரிகளை ஆலோசகர்களாகக் கொண்டிருப்பது.
(3) இந்துமகா கடல் நாடுகளில் பௌத்தர்களின்புனிதத்தலங்கள் தோறும்150 வீடுகள் கட்டுவது.
(4) பத்திரிகைக்காரரின் முதுகை பறிப்பது.
(5) கார்ட்டூனிஸ்ட்களைக் கத்தியால் குத்துவது.

மேற்படி சிறப்பியல்புகளை நமது போதிசத்துவர் கொண்டிருக்கிறார் என்பதோடு கலியுகத்தில் தம்மதுவீபத்தை ஆள்வதற்கு அவரைவிடப் பொருத்தமான ஒரு மன்னர் கிடைப்பது அரிது என்றும் விமர்சகர்கள் கூறுகிறார்கள்,

அவரிற்குச் சார்பான விமர்சகர்கள் அவரைப் பேரரசர் அசோகரோடு ஒப்பிடுகிறார்கள் அசோகரிற்குப்பின் பௌத்தர்களின் புனிதத்தலங்களை போதிசத்துவரைப்போல யாரும் போஷித்தது இல்லையென்றும் அவர்கள் கூறுகிறார்கள். உதாரணமாக போதிசத்துவர் இந்தியாவிலுள்ள புத்தகாயாவிற்கு தங்கவேலியும் தங்கவிதானமும் தரமுன்வந்திருப்பதை அவர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள். அசோகர் தூண்களை நிறுவிய இடங்கள் தோறும் போதிசத்துவர் நூற்றைம்பது வீடுகள் கட்டித்தரப்போகிறார் என்றும் அவர்கள் கூறுகிறார்கள். போதிசத்துவர் அசோகரைப் போல பேரரசர் இல்லை என்றாலும் அவரிற்கும் அசோகரிற்தும் இடையில் வித்தியாசங்கள் வெகுகுறைவு என்றும் மேற்படி விமர்சகர்கள் கூறுகிறார்கள். அசோகர் மகதப் பேரரசை விரித்துச் செல்கையில் இறுதிப்போரை கலிங்கத்தில் சந்தித்தார்.இன்று ஒரிசா என்றழைக்கப்படும் கலிங்கததில் அன்றுசுமார் ஒருலட்சம் கலிங்கர்களை அசோகர் கொன்றார், அத்தோடு அவரிற்கு யுத்தம் சலித்துவிட்டது. எனவே பௌத்தராக மாறினார். ஆனால்நமது போதிசத்துவரோஒரு பௌத்தராக இருந்துகொண்டே60 000 சிங்களவர்களைக் கொன்று விட்டார் இத்தொகையோடு வடக்குக்கிழக்கில் இரண்டாவது ஈழப்போரில் கொல்லப்பட்ட தமிழர்களின் தொகையையும் சேர்த்தால் மொத்தம் ஒருலட்சத்தை அணுகிவிடும். இது போதிசத்துவரைஅசோகரோடு ஒப்பிடப் போதுமானது என்று முன் சொன்ன விமர்சகர்கள் கூறுகிறார்கள். கொலைகள் செய்த பின் பௌத்தரானாரா? பௌத்தரான பின் கொலைகளைச் செய்தாரா போன்ற கேள்விகள் அநேகமாக கிழநரியின் விசுவாசிகளான கழுகுகளைப் போன்றவர்களால் கேட்கப்படும் கேள்விகள் என்று கூறி அவற்றை நிராகரித்தும் விடுகிறார்கள்.

ஆனால் பக்கச் சார்பற்ற விமர்சகர்கள் போதிசத்துவரின் ஆட்சிக் காலத்தை மூன்று கட்டங்களாகப்பிரிக்கிறார்கள்.

1. கம் உதாவயுகம்
2. கறுப்புப் பூனைகளின் யுகம்
3. யூகி யுகம் (அதாவது யூகி Juki தையல் மெஷின்களின் யுகம்)

இம்மூன்றையும் சற்று விரிவாக ஆராயுமிடத்து போதிசத்துவஅரசியலின் சிறப்பியல்புகளை எளிதில் புரிந்துகொள்ளலாம்.முதலாவது கம்உதாவயுகம் - இந்த யுகத்தில் போதிசத்துவர் 10 லட்சம் வீடுகளைக் கட்டிக் தந்தார்.இந்த யுகத்தின் பிரதான சுலோகம் 'இரண்டாயிரமாவது ஆண்டில் சகலருக்கும் புகலிடம்'' என்பதாகும். இந்தச் சுலோகத்தின் சிங்கள மூலமும் ஆங்கில மொழிபெயர்ப்பும் சரியான அர்த்தத்தைக் கொண்டிருக்க தமிழில் 'வதிவிடம்' என்பதற்குப் பதிலாக 'புகலிடம்' என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. புகலிடம் எனப்படுவது ஆபத்துக் கஞ்சி தஞ்சம் புகுந்த இடம் என்பதே சரியான அர்த்தம் என்று பண்டிதர்கள் உறுதிப்படுத்துகிறார்கள் சரியான அர்த்தத்தில் கூறுவதானால் ''இரண்டாயிரமாவது ஆண்டில் சகலருக்கும் வதிவிடம்'' என்றே எழுதவேண்டும் என்று மேலும் அவர்கள் கூறுகிறார்கள்.

ஆனால் போதிசத்துவரின் மேற்படி பிழையான அர்த்தத்தைத் தரும் சுலோகம் ஒரு விதத்தில் தீர்க்கதரிசனமாகவும் அமைந்து விட்டதை தமிழர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள். ஏனெனில் போதிசத்துவ ஆட்சியில் தமிழர்கள் முன்னெப்பொழுதும் இல்லாத அளவில் அகதிகளாக சொந்தநிலத்திலும் பிறதேசங்களிலும் அலைந்து கொண்டிருக்கிறார்கள். எனவே 'இரண்டாயிரமாவது ஆண்டில் எல்லாத் தமிழருக்கும் அகதிமுகாம்'' எனவும் இச்சுலோகத்தை வியாக்கியானம் செய்யமுடியும் என்றுதமிழர்கள் கூறுகிறார்கள்.

அடுத்தது கறுப்புப் பூனைகளின் யுகம். இதனை எரியும் ரயர் மாலைகளின் யுகம் எனவும் அழைப்பர். இந்த யுகத்திற்கான சுலோகம் புனித பைபிளின் பழைய ஏற்பாடு காலத்தையொத்தது. ''கண்ணுக்குக்கண் - பல்லுக்குப் பல் - இரத்தத்திற்கு இரத்தம்'' என்பதே அந்தச் சுலோகம். இந்த யுகத்தைப்பற்றி நாம் அதிகம் கூறத்தேவையில்லை. ஏற்கனவே மனிதஉரிமை அமைப்புக்கள் இது பற்றிப்பக்கம் பக்கமாக எழுதிவிட்டன. தவிர முன்னாள் பொலிஸ்மா அதிபரான பெரிய கறுப்புப் பூனை ஒன்று மனந்திருந்தி ரகசியங்களை வெளியிட ஆரம்பித்திருக்கிறது. அந்தப்பெரிய கறுப்புப்பூனையும் தன்னை ஒரு போதிசத்துவர்என்று கூறி வருகிறது என்பதை மட்டும் இங்கு வாசகரின் கவனத்திற்குக்கொண்டுவருவதோடு நாம் இனி அடுத்தயுகத்தைப்பற்றிச் சிறிது பார்க்கலாம்.

அடுத்தது யூகியுகம். இப்பொழுது நடந்து கொண்டிருப்பது.இந்த யுகத்தில் யப்பானிய உற்பத்தியான யூகி தையல் மெஷின்களின் துணையோடு தம்மதுவீபத்தை ஆடைத்தொழிற்சாலைகளால்நிரப்புவதுஎன்றுபோதிசத்தவர் திட்டமிட்டிருக்கிறார். இந்த யுகத்தின் பிரதான சுலோகம் ''இந்த வருட இறுதிக்குள் 200 ஆடைத்தொழிற்சாலைகள்'' என்பதாகும்.ஏற்கனவே 46 தொழிற்சாலைகளை போதிசத்துவர் திறந்து வைத்துவிட்டார்.


அவர் ஒரு செயல் வீரர். எல்லோரும் முன்பாக அதிகாலையில் விழித்து எழுபவர். மரம் நட்ட உடனேயே கனிகளைப்பறிக்கும் நாளையும் குறித்துக் கொள்பவர் எப்படி சில மாதங்களில் 60,000 சிங்கங்களைக் கொன்று ஆற்றில் போட்டாரோ அப்படி ஒரு வேகத்தில் மிகுதி 154 தொழிற்சாலைகளையும்அவர் விரைவில் திறந்து வைக்கப்போகிறார் என்பதை வாசகர்கள் திட்டவட்டமாக நம்பலாம்.

இப்படியாக போதிசத்துவரின் ஆட்சியில், தம்மது வீபம் மேற்சொன்ன மூன்று யுகங்களினதும பேறாக (யூகி யுகம் இன்னும் முடியவில்லை) உலக அளவில் குறிப்பாக மூன்று விசயங்களில் முன்னணி நாடாகத்திகழ்கிறது. அவையாவன.

1. உலகிலேயே அதிகம் பேர் காணாமல் போன அல்லது விசாரணைகளின்றிக் கொல்லப்பட்ட நாடு
2. தென்னாசியாவிலேயே அதிகம் பேர் சிறுவர் விபசாரத்தில் ஈடுபடும் நாடு.
3. உலகிலேயே அதிகம் பேர் குடிகாரர்களாகஇருக்கும் நாடு.

பொதுவாக, ஜாதகக் கதைகளின் படி ஒன்பது போதிசத்துவர்கள் தோன்றிய பின் இறுதியாக புத்தர் அவதரிப்பார் என்று கூறப்படுகிறது. எமது போதிசத்துவர் தன்னை ஒரு கடைசிப் போதிசத்துவர் என்றே நம்புவதுபோற்தோன்றுகிறது.ஆனால் கலியுகத்தில் எதற்குத்தான் போட்டி இல்லை? கிழநரி தானும் ஒரு போதிசத்துவர் என்றும் அல்லும் கடைசிப் போதிசத்துவரு என்றும் கூறித்திரிகிறது கழுதைகளும் தங்களிற்கிடையில் சில போதிசத்துவர்கள் இருப்பது போன்ற தோரணையோடுபேசி வருகின்றன. புதிதாக பெரியகறுப்புப்பூனையும் அரங்கிற்குள் நுழைந்திருக்கிறது. அதுவும் தன்னை ஒரு போதிசத்துவர் என்று கூற முயல்கிறது. இப்படி ஒரேநேரத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட போதிசத்துவர்கள் தோன்றியுள்ள நாடு விரைவில், யூகி யுகத்தின் முடிவில் ஒருபெரிய ஆடைத் தொழிற்சாலையாக மாறிவிடப்போகிறது என்று போதிசத்துவரின் ஆதரவாளர்கள்கூறிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் பக்கச்சார்பற்ற விமர்சகர்களோ நாடு விரைவில் ஒரு பிச்சைக்காரனின் கிழிந்த கந்தலைப்போலாகி விடும் என்று கூறிக்கொண்டிருக்கிறார்கள்.

# சிகை அலங்கரிப்புக்கலைஞர்



# மனோகரதாஸ்

மேனாட்டில் முடிவெட்டும் தொழிலை ஒரு கலையாகவே போற்றுகிறார்கள். ஆங்கிலத்தில் இதனை TONSORIAL ART என்பார்கள். லண்டனிலுள்ள சிகை அலங்காரக் கல்லூரியான றொபேட் பீல்டிங் அக்கடமி உலகப் பிரசித்தம். வாரமொன்றுக்குப் பயிற்சிக்கட்டணம் 300 பவுண்.

மனோகரதாஸ் சிகை அலங்காரக் கலைப் படிப்பை மலேசியாவில் முடித்து விட்டு மலேசியா மற்றும் சிங்கப்பூர், இந்தோனேசியா ஆகிய நாடுகளில் தொழிலில் ஈடுபட்டு கடைசியில் ஆரம்பித்த இடத்திலேயே தொழில் செய்கிறார். அவருடனான உரையாடல் இங்கே தரப்படுகின்றது.

தொகுப்பு: மதன்

மனோகரதாஸ் (வயது36) பலாலி வீதி பரமேஸ்வராச் சந்தியில் நியூ தாசன் சலூன் என்ற பெயரில் சொந்தமாக ஒரு சிகை அலங்கரிப்பு நிலையம் நடத்தித் தொழில் முன்னணியில்திகழ்கிறார் அவரது உயர்வுக்கு முன்னோடியாக இருந்தவர் அவரது தந்தை நடராஜா.

தனது கதையைத் தாசனே சொல்லுகிறார்-

வாழ்க்கையில் எனக்கு முன்னேற்றம் எளிதாகக் கிடைக்கவில்லை. பல இன்னல்களைச் சந்தித்துக் கடும் உழைப்பால் தான் முன்னுக்கு வர முடிந்தது. எனது குடும்பம் சாதாரண குடும்பம். எனது அப்பா நடராஜா ஒரு சிகை அலங்கரிப்புதொழிலாளி.தொழில் சுமாராக இருக்கவே மத்தியானம் பாடசாலைவிட்டபின் அப்பாவுக்கு உதவியாகக் கடையில் நிற்பது வழக்கம் இரவில் கடை பூட்டிய பிறகே அப்பா வீடடுக்கு வருவார் அப்பாவின் அயராத உழைப்பால் குடும்பத்தில் அதிகம் கஷ்டம் இருக்கவில்லை. அப்பாவின் விருப்பப்படி பள்ளிக் கூடப் படிப்பிற்கு முழுக்குப் போட வேண்டியதாயிற்று. படிப்பை இடையில் நிறுத்தியது குறித்து நான் அடிக்கடி கவலைப் பட்டிருக்கிறேன் இருந்தும் 5 ஆம் வகுப்பு வரை படித்ததால் எழுதப் படிக்கத் தெரியும் என்ற மனத்திருப்தி ஒரு புறம். பன்னிரண்டு வயதிலேயே தொழில் செய்ய ஆரம்பித்து விட்டேன். இப்போது நியூ தாசன் சலூன் இருக்கும் இடம் அப்பா நடத்திய சிகைஅலங்கரிப்புநிலையம் தான்

இந்தச் சூழலில் தகப்பனார் சலூனில தொழில செய்து கொண்டிருக்கும் போதே மாரடைப்பால் மரணமானார் இது எனக்குப் பெரும் அதிர்ச்சியைத் தந்தது. நான் எனக்குள்ளேயே அழுதேன். அப்போது எனக்கு வயது பதினைந்து. நான் தான் குடும்பத்தில் மூத்த பிள்ளை எனக்கு ஒரு தம்பியும், இரு தங்கைகளும் இருக்கிறார்கள். படிக்க வேண்டிய வயதில் படிக்கமுடியாமல் குடும்பச் சுமையைச் சுமக்கவேண்டிய தர்மசங்கடமான நிலை. ஆனால், நான் தளரவில்லை. மற்றவர்களைப் போல் உயர்ந்து விடலாம் என்ற எண்ணத்தில், முழுமூச்சுடன் செயற்பட்டேன். விடாமுயற்சியாலும், அயராத உழைப்பினாலும் கிடைத்த பணத்தைச் சிக்கனமாகச் செலவு செய்ததால் எங்கள் வாழ்க்கை வண்டி சுமுகமாக ஓடிக்கொண்டிருந்தது.

## ஆலோசனை கூறிய உறவினர்

"இப்படியே போய்க்கொண்டிருந்தால் என்றைக்கு நீ வாழ்க்கையில் முன்னேறுவது? சிங்கப்பூருக்கு வந்து சிகை அலங்காரம் படித்தால் என்ன?" என்று சிங்கப்பூரிலிருந்து திரும்பிய எனது உறவினர் தனக்குத் தெரிந்த யோசனையை எனக்குச் சொன்னார். என்ன செய்யலாம் என்று நான் மண்டையைப் போட்டுக் குழப்பிக் கொண்டிருந்தேன். உறவினர் என்னை அடிக்கடி நச்சரித்தார்.

சிங்கப்பூர் போவதென்றால் சாதாரணமான காரியமா? பயணச் சீட்டுக்கு யானை விலை. எப்படி வாங்க முடியும்? நல்லூரடியில் நாம் குடியிருந்த காணியை 20,000 ரூபாவுக்கு ஈடுவைத்து, அதில் கிடைத்த பணத்தைக் கொண்டு 1978 இல் சிங்கப்பூர் பயணமானேன். சிங்கப்பூரில் விஸாவை நீடிப்பதில் சற்றுச் சிரமமிருந்தது. மலேசியாவின் தலை நகர் கோலாலம்பூரில் Unisey Hairdressing Central School இல் பத்து மாதங்கள் படித்து டிப்ளோமா பெற்றேன். தொழிலில் எனக்கு நல்ல முன்னனுபவம் இருந்ததால் இரண்டுவருடக் கற்கை நெறியை பத்துமாதங்களில் முடிக்க எனக்கு விதிவிலக்குத் தரப்பட்டது தவணை முறையில மாதா மாதம் 600 வெள்ளி படிப்புச் செலவிற்குப் பணம் வசூலிப்பார்கள் ஒரு வெள்ளியின் பெறுமதி அப்போது சிலோன் காசுக்கு ஒன்பது ரூபா. பகலில் சலூன் ஒன்றில் பகுதி நேர வேலை. அந்த உழைப்பால் பெற்ற வருமானத்தைக் கொண்டு படிப்புச் செலவு உள்ளிட எனது செலவுகளையும் கவனித்தேன் ஞாயிறு தவிர பி.ப 2—6 வரை படிப்பு. செய்முறைக்கல்வியில் தான் அதிக அழுத்தம். முதலில் பொம்மை உருவில் [Dummy] மயிர் வெட்டிப் பழக வேண்டும். எமது பாடத்திட்டத்தில் சிறுவர் மற்றும் ஆண், பெண்களுக்கு முடி வெட்டுதல் சிகை அலங்காரம். முடியை விரும்பிய மோஸ்தரில் அமைத்தல், முடிக்குச் சாயம் பூசுதல் உடம்பு பிடித்தல் (கழுத்துக்கு மேல்) — இத்தியாதி திறன்களை அமைத்திருக்கிறார்கள்

ஒரு வருடக் கல்விச் செலவுக்கு இலங்கைக் காசுக்கு 80,000 ரூபா ஆயிற்று 1979 இல் வெறுங்கையோடு இலங்கை திரும்பினேன் வெளிநாடுகளிலிருந்து வருபவர்கள் பலரும் மனைவி பிள்ளைகளுக்குச் சங்கிலி காப்பு துணிமணி, என்று வாங்கி வரத்தானே முடியும் அப்படித்தான் பலரும் வாங்கி வருகிறார்கள் நான் கல்வியைத் தான் முதலீடாகக் கொண்டு வந்தேன். இந்த ஒரு வருட காலத்தில் லஷ்மி எங்கள் வீட்டுப்பக்கம் தலை வைத்துப்படுக்க மறந்து விட்டாள். மீண்டும் மலேசியா கை கொடுத்தது. ஐந்து வருடங்கள் மலேசியா, சிங்கப்பூர் இந்தோனிசியா என்று பிழைப்பும் பார்த்ததால் கஷ்டம் கொஞ்சம் கொஞ்சமாக மறைந்தது.

## சிரித்து வாழ வேண்டும்

சிரித்து வாழப்பழகிக் கொள்வது சிகை அலங்கரிப்புத் தொழிலுக்கு ஒரு படிக்கட்டு எனது தகப்பனார் அமைதியாக இருந்து வாடிக்கையாளரிடம் நட்போடு பழகிக் கொள்வார் வாடிக்கையாளர்களும் அவருடன் மரியாதையுடன் பழகிக் கொண்டார்கள். என் தந்தையாரிடமிருந்து நான் கற்றதனால் தொழிலைத் தன்நம்பிக்கையுடன் செய்ய முடிகிறது. அவ்வப்போது தொழில் நுணுக்கங்களையும், யோசனைகளையும் கூறி என்னை வழி நடத்தியிருக்கிறார். வாடிக்கையாளர்களை சிரித்த முகத்தோடு வரவேற்று, உபசரித்து நேர்மையாகத் தொழில் செய்ய வேண்டும் என்று எங்களுக்குச் சொல்லித் தந்திருக்கிறார்.

எனது தம்பி தேவதாசும் மலேசியாவில் சிகை அலங்கரிப்புக் கலையில் டிப்புளோமா பெற்றவர் அவர், நான், என் தங்கச்சி புருஷன் எல்லோரும் கடையில்தான் வேலை புதிய வாடிக்கைக்காரர் படஅல்பத்தைப் பார்த்து இந்த மோஸ்தரில்தான் முடிவெட்ட வேண்டும் என்பார்கள். அவர்களுக்கு ஆலோசனை கூறினால் ஏற்றுக் கொள்வார்கள் இந்தக் கலை நாணயத்தின் இரு பக்கங்கள் மாதிரி. எனக்கும் திருப்தி ஏற்பட வேண்டும் வாடிக்கையாளர்களுக்கும் திருப்தி ஏற்பட வேண்டும். தாய்மையின்மை அவதானிக்கப்பட்டால் பவ்வியமாகச் சொல்லி அனுப்பி விடுவோம் பிரச்சினை உள்ளவர்கள் எங்கள் வாடிக்கையாளராக இல்லை. ஒருமுறை எமது கடைக்கு வந்தவர்கள் மறுமுறை வரத்தான் செய்வார்கள். புகைபிடிக்கும் பழக்கம். மது பாவித்தல் எம்மிடம் இல்லை ஒழுக்கம்தான் எமது 'முதலீடு'

## தொழில் வருமானம்

இன்றுள்ள நாட்டு நிலையில் வருமானம் போதாதென்பது ஊரறிந்த உண்மை ஆனால் முன்பு இத்தொழில்ல் இருந்து கிடைத்த வருமானத்தைக் கொண்டுதான் சகோதரிகளைக் கரை சேர்த்து, காணியை மீண்டு வீடு வாசல் கட்டி வாழ்கிறேன். வட இலங்கை சிகை அலங்கரிப்பாளர் சங்கம் பெண்களுக்கு முடி வெட்ட 40 ரூபா என்று கூலி நிர்ணயித்துள்ளது. ஆண்களுக்கு முடிவெட்டிச் க்ஷவரம் செய்ய 25 ரூபா ஏன் இந்த வித்தியாசம் என்று நீங்கள் கேட்கலாம். ஆண்களுக்கு 30 நிமிடங்களுக்குள் முடிவெட்டிச் க்ஷவரம் செய்து விடலாம். ஆனால் பெண்கள் விடயத்தில் அப்படிச் செய்ய முடியாது. முடி வெட்ட 45 நிமிடங்கள் வேண்டும். என்னைப் பொறுத்த வரையில் எனக்குக் கிடைக்கும் வருமானம் எனது முதலீட்டுடன் ஒப்பிடும்போது இவ்வளவு திருப்திகரமானதல்ல. உதாரணம்:- நான் பெற்ற பயிற்சி காரணமாக நான் உபயோகிக்கும் உபகரணங்கள் சற்று வித்தியாசமானவை கத்தரிக்கோலின் விலை சுமார் 2000 ரூபா. அது கையடக்கமானது. சாணை பிடிக்க வேண்டிய அவசியமில்லை இரு அலகுகளும் உராசும்பொழுது தானாகவே கூராகி விடும். சாதாரண கத்தரிக்கோலின் விலை 175 ரூபா இருக்கும். எது எப்படியாயினும் மற்ற நாடுகளுடன் ஒப்பிடும்போது சிகை அலங்கரிப்புக்கு அறவிடப்படும் கட்டணம் இலங்கையில் தான் மிகக் குறைவு மற்ற நாடுகளில் இந்தத் தொழிலில் நல்ல வருமானத்தைப் பெற முடியும்.

படிப்பை இடைநிறுத்தியது குறித்து எனது மனம் சிறகடித்துப் பறந்ததுண்டு. அந்தக் குறை இப்போது நீங்கி விட்டது. பல்கலைக்கழகத்துக்கு அண்மையில் எனது சலூன் இருப்பதால் பல்கலைக்கழக மாணவர்களும், ஆசிரியர்களும் எனது வாடிக்கையாளர்கள் அவர்களுடனான சகவாசதோஷத்தினால் வாழ்க்கையில் கொஞ்சம் தாமதித்தாவது சிறிது அறிவைப் பெற்றுக் கொள்ள முடிகிறது

எனது சலூனை நவீனப்படுத்த விருப்பம்தான். நாட்டு நிலைமை காரணமாக அதைச் செய்ய எனக்கு இப்போது விருப்பமில்லை, தொடர்ந்தாற் போல் ஐந்து வருடங்கள்தான் இந்தத் தொழிலைச் செய்ய உத்தேசம் அதற்கப்புறம் சொந்தத்தில் ஒரு சிகை அலங்காரப் பயிற்சி நிலையம் அமைக்க முடிவு செய்துள்ளேன். குறைந்த செலவில் இதற்கான பயிற்சி வழங்குவது என்று திட்டம், விரும்பியவர்கள் சேர்ந்து பயிற்சி பெறலாம். மற்ற நாடுகளில் சிகை அலங்காரக் கல்லூரிகள், அக்கடமிகள் நிறைய உள்ளன. கொழும்பில் கூட இல்லை. சிகை அலங்கரிப்புத் தொழிலுக்கு நல்லதொரு எதிர்காலம் உண்டு என்பது இன்னும் பலரால் உணரப்படாமலேயேஉள்ளது. இது வருமானம் ஈட்டக்கூடிய தொழில். வெளிநாடுகளிலெல்லாம் இத் தொழிலை ஒரு கலையாகவே கருதுகிறார்கள் ஐரோப்பிய நாடுகளில் இத் தொழில் நவீனமயப்படுத்தப்பட்டு தொழில்நுட்பவத்திகளைப் பயன்படுத்துகின்றார்கள். அங்கெல்லாம் இத்தொழிலுக்குச் சமூகத் தடைபாடு எதுவும் இல்லை. விரும்பியவர்கள் பயிலலாம் ஏனைய தொழில் துறைகளில் வேலை வாய்ப்பு இல்லாத நம் நாட்டு இளைஞர்கள் இத் தொழிலைப் பழகிக் கொள்வதன் மூலம் தமது எதிர்காலத்தை வளப்படுத்திக் கொள்ளலாம். அத்துடன் இத் தொழிலை ஆரம்பிப்பதற்கு பெரியமுதலீடுஅவசியமில்லை சிறிய மூலதனத்தோடு ஆரம்பித்துப் படிப்படியாகப் பெரிப்பிக்கக் கூடிய தொழில். யாழ் மாநகரசபை நிர்வாக எல்லைக்குள் சுமார் 150 சலூன்கள் உள்ளன இந்தச் சலூன்கள் இந்த நெருக்கடி காலத்திலும் ஏதோ வயிற்றுப்பாட்டுக்கு உழைக்கத்தான் செய்கின்றன.

உரையாடலை முடித்துக் கொண்டு விடைபெற்றுக் கொள்வதற்கு முன்பதாக குடிமைத் தொழில் பற்றி உங்கள் கருத்தென்ன என்று கேட்ட போது-

அந்நாளிலிருந்து முடிவெட்டும் தொழிலைப் பலர் குடிமைத்தொழிலாகச்செய்து வந்தனர். குடிமைத் தொழிலால் ஏற்படுகின்ற பாதிப்புகளை உணர்ந்த சிகை அலங்கரிப்பாளர் சங்கம் முடிவெட்டுவதைக் குடிமைத் தொழிலாக மேற்கொள்வதற்குத் தடைவிதித்துள்ளது. அப்போது செய்த குடிமைத் தொழிலுக்கும் இப்போதைய சிகை அலங்கரிப்புக் கலைக்கும்எவ்விதசம்பந்தமுமில்லை. சிகை அலங்கரிப்புத் தொழிலைக் குறிப்பிட்ட சிலர்தான் செய்யவேண்டும் என்பதற்கு எவ்வித ஆதாரமுமில்லை. எவர் வேண்டுமானாலும் செய்யலாம். இப்போது வேறு தொழில்துறை சார்ந்த ஒரு சிலரும இத் தொழிலைச் செய்கிறார்கள். இது ஆரோக்கியமான சூழ்நிலையாகும். சிங்கப்பூர், மலேசியாபோன்ற நகரங்களில் சிகை அலங்கரிப்பை ஒரு தொழிலாக எல்லா இனத்தவர்களும் மேற்கொண்டுள்ளனர். லண்டனுக்கு டாக்டர் பட்டம் பெறச் சென்ற யாழ்ப்பாணத் தமிழர் ஒருவர் டாக்டருக்குப் பதிலாகச் சிகைஅலங்காரத்தைப்படித்து சிங்கப்பூர் புகையிரதநிலையத்துக்கு அருகில் நவீனசலூன் ஒன்றையே நடத்துகிறார்.

சிகை அலங்கரிப்புத் தொழிலைப் பற்றிய விளக்கம் சிலருக்குத் தெளிவில்லாமலும் இருக்கிறது. எனது வாடிக்கையாளரின் குழந்தை ஒருவருக்குத் தொடக்கு கழிக்க முடியிறக்க வேண்டுமானால் நான் அங்கு போகத்தான் செய்வேன் டாக்டர், மெக்கானிக் வீட்டுக்குப் போவது போல், குறிப்பிட்ட வாடிக்கையாளரின் வீட்டுக்கு நான் விஜயம் செய்வது தொழில் சார்ந்தது அதற்கும் குடிமைக்கும் சம்பந்தமில்லை. வெளிநாடுகளிலெல்லாம் இந்தத் தொழிலுக்கு நல்ல மதிப்பு என்றார் அவர்.

## கீழ்த் திசையின் முகம் நோக்கி

அந்த விடியல் இதுவல்ல...
இருளால் தாக்கப்பட்ட
வைகறை
கறைபடுத்தப்பட்ட
வெளிச்சம்;
விழிப்புகள்மறுக்கப்பட்டதால்
உறக்கங்களோடு
உறவாடும் விழிகள்
நெஞ்சை மிதிக்கும்
ஆக்கச் சப்பாத்துகளால்
திணறலான சுவாசிப்பு
குரல்வளையை நெரிக்கும்
இனவாதக் கரங்களால்
சுயமில்லாத பேச்சு
கால்கள் முடியிட
கைகள்தொழும்புசெய்தபடி
எதிரி கொப்பளிப்பது
எங்கள் குருதியில்
அடுப்பெரிப்பது
எங்கள் எலும்புகளில்
அந்த விடியல் இதுவல்ல...
களைய வேண்டிய
தளைகள்
புதிது புதிதாய்...
தகர்க்க வேண்டிய
தடைகள்
ஒவ்வொரு உருவிலும்
ஓங்கி வளர்ந்து...
நாங்கள் ஒத்தாலொழிய
எங்கள் குருதியில்
அவன் கொப்பளிப்பதை
நிறுத்த மாட்டான்.
எரிமலையாய்
வெடித்தாலொழிய
எங்களை விறகாய்
நினைப்பதை மறக்கமாட்
டான்

மண் சிவக்க
குருதி சிந்தி
விண்ணதிரக் குரலுயர்த்தி
வழியெங்கும் உயிர்விதைத்து
கீழ்த்திசையின்
முகம் நோக்கி
நெடுந் தொலைவு
கடும் பயணம்
அந்த விடியல்
புலரும் ...
சூரியக் கதிர்கள்
முகம் தழுவும்
கறையற்ற வெளிச்சம்
இருள் கழுவும்
தலை நிமிர்த்தி
தமிழினம் வானுயரும்

சு. சுரேஸ்குமார்

# விழுதுகள்

காலகட்டத்தில்தான் கில்பட்டின் உறுதியான வரலாறு எழுதப்பட்டுக் கொண்டிருந்தது. அவன் இயக்கத்திற்குத் தன்னை முழுமையாக உணர்த்திக் கொண்டிருந்தான். அவனது தோழர்களின் நெருக்கமான நேசிப்பு இன்னும் உறுதிப்பட்டுக் கொண்டிருந்தது. அவனது தளபதிகள் அவன் மேல் கொண்ட நம்பிக்கைகள் மேலும் வலுவடைந்து கொண்டிருந்தது. மொத்தத்தில் அவன் தன்னை முழுமையாக இயக்கத்திற்கு அர்ப்பணித்துக் கொண்டிருந்தான்.

ஒவ்வொரு நாட்களினதும் இரவுப்பொழுதுகள்.கைகளிலே உறுதியாகப் பற்றப்பட்ட ஆயுதங்கள். தோள்களிலே மிகுந்த சுமையுடைய உணவுப்பொருட்கள் இவற்றோடு ஊருககும் காட்டிற்கும் என்று மாறிமாறி நடந்து கொண்டிருக்கும் போராளிகள் ஏனென்றால் அடுத்தடுத்த நாட்களின் வயிற்றுப் பிரச்சினையை இன்றே உறுதிடபடுத்திவிட வேண்டிய நிர்ப்பந்தம். காரணம் நாளைய நல்ல விடிவென்பது நிச்சயமற்றதொன்றாகிவிடட நேரமது இவ்வாறு நடந்து கொண்டிருப்பவர்களுக்கு முன்னால் கில்பட். நேற்றா? இன்றா? நாளை மட்டுந்தானா?இல்லை ஒவ்வொருநாளும். முனனால் சென்றுகொண்டிருப்பவன் அவன்தான். தோள்களில் எப்பொழுதும் தனது தோழர்களினதை விடக் கூடிய சுமை. கைகளில் அவனது நேசிப்பிற்குரிய விறண் எல் எம் ஜி.அது அவனுக்கு என்றும் ஒரு சுமையாக இருந்ததில்லை. சிறு கைத்துப்பாக்கியைப் போல் அது என்றும்அவனதுகைளைக விட்டு அகன்றதில்லை. ''மச்சான். உன்ர எல்.எம் ஜி ஐ தா மச்சான். நான் தூக்கிக் கொண்டு வாறன். நீ பெரிய மூடையெல்லே தூக்கிக் கொண்டு வாறாய்'' அருகில் வந்துகொண்டிருக்கும் அன்புத் தோழனின்ஆதரவான வார்த்தைகள். ஆனாலும் கில்பட்டின் வாயிலிருந்து உறுதியான மறுப்புக்கள். அது நாள்தோறும் நடக்கின்ற வழமையான சம்பவம் என்பதனால் வியப்பொன்றுமில்லை எத்தனை தூரமெனினும் அதனை லாபகமாகத் தூக்கிச் செல்கின்ற அவன் தூங்குகின்ற வேளையிலும் அதனை அணைத்தபடியே உறங்கும் அவன்...... என்றும் அதனைப் பிரியாதவன்.

''கில்பட்'' - அவனிடம் ஒப்படைக்கப்பட்ட ஒரு வேலை. பேஸ் அடிப்பதில் இருந்து ஆமிக்கு அடிப்பது வரை அது எதுவானாலும் சரி. ஒப்படைத்து விட்டால் அது முடிந்து விடும் என்ற நம்பிக்கையுடன் நிம்மதியாக இருக்கலாம். எவ்வளவோ கஷ்ரப்பட்டு. தன்னை வருத்தி ...... எனினும் அந்த வேலை ஒழுங்காக, கச்சிதமாக முடியும் ''யாரடாப்பா இந்த வேலையைச் செய்தது அட்டகாசமா இருக்கு'' யாரோ ஒருபோராளியின் ஆச்சரியமான கேள்வி ஆனாலும் அவனுக்கு புரியும் அதைச் செய்தது யார்என்று 'கில்பட்' அவன் வேலைஏதும் செய்யாது இருக்கும் நேரங்களும்; முகாமில் நிற்கின்ற நேரங்களும் மிகவும் குறைவு. என்ன வேலை? சாமான் தூக்குவதா?கொட்டில் போடுவதா? கிணறு வெட்டுவதா? பேஸ் மாறுவதா? றெக்கிக்கு போவதா? தாக்குதலா?


'றெக்கிக்குப்' போகவேண்டும் பொறுப்பாளரின் வார்த்தைகள் எங்கே? எவ்வளவு தூரம்? எத்தனை நாள்?சாப்பாடு?......கில்பட்டின் வாயில் இருந்து எந்த ஒரு கேள்வியும் இல்லை. உடன் புறப்பட்டு விடுவான் அவன். ஆனாலும் அதற்கு பின்னர் தான் அங்கு பெரிய பிரச்சினையேயிருக்கும் றெக்கியெல்லாம் முடிந்து தாக்குதலும்தயாராகிஅதற்கு போவதறகும் எல்லோரும் புறப்பட்டுவிட்டார்கள் ஆனாலும் கில்பட்...... தாக்குதலுக்கு செல்லும் அணியில் அவன் பெயர் இல்லை. அப்பொழுது தான் அவன் உள்ளத்துஉணர்வுகளைத் தோழர்கள் காண்பார்கள். சின்னக் குழந்தை போல் விம்மி அழுவதும், கோபத்தில் யாருடனும் கதைக்காமல் தனியே போய் இருப்பதும் ஆம் அப்பொழுதுஅவன் குழந்தையாகி விடுகின்றான். ஒரு போராளியின் உச்சக்கட்ட மகிழ்ச்சி. எதிர்பார்ப்பு, ஆதங்கம் எல்லாமே தான் தாக்குதலுக்கு செல்ல வேண்டும் எனபது தான். அந்த எதிர்பார்ப்பு ஏமாற்றமடைகின்ற பொழுது தவிர்க்கமுடியாமல் அவனுக்கு அந்த சந்தர்ப்பம் கிடைக்காத பொழுது அந்த உறுதியின் உள்ளமோ அதனைத் தாங்கும் சக்தியற்று குழந்தையாகி விடுகின்றது. இது கில்பட்டிடம் மாத்திரமல்ல ஒவ்வொரு போராளியிடமும்நாம் அறிந்து கொள்கின்ற உண்மை.

அல்லும் பகலும் துள்ளித் திரிந்த எங்கள் அன்புள்ளம் சோர்ந்து துவண்டு. அடங்கிப் போன அந்த நாள் ஒய்வொழிச்சல் இன்றி ஓடித் திரிந்த அந்த உறுதியின் உறைவிடம் ஓய்ந்து போன அந்த நாள் துன்பமயமானது கொடியது. காலமகள் மேடையில் கண்ணீரை வரவழைத்த அந்த நாடகம் 1989 ஆம் ஆண்டுமாசித் திங்கள் ஆறாம் நாள். நினைக்கின்ற போதிலெல்லாம் எங்கள் நெஞ்சங்களை நெகிழவைத்துஇன்னும் இன்னும் எங்கள் இதயங்களில் எதிரொலிக்கின்ற அந்தச் சோக மயம் திருமலை நகரில் கடலை அண்மித்த கிராமங்களில் ஒன்று சல்லி அந்தக் கிராமத்தின் கடற்கரையோரத்தில் அன்றிரவு யாரையோ எதிர்பார்த்தபடி ஆளோடு ஆள் பேசாது அமைதிகாத்து நிற்கின்ற பல போராளிகள் ஆம் திருமலைப்பட்டணத்தை அண்மித்த பகுதியொன்றில் இந்திய இராணுவ முகாம்களுக்கு மிக அண்மையில் அமைந்திருந்த துரோகக்கும்பலொன்றின் முகாமொன்றைத் தாக்குவதற்காக கடல் வழியாகப் படகுகளில் சென்ற தோழர்கள் இன்னமும் திரும்பிவரவில்லை ஏக்கத்தோடு காத்திருக்கின்ற இவர்கள். நேரம் செல்லச் செல்ல ''என்ன நேர்ந்ததோ'' எனும் ஏக்கத்தின் அதிகரிப்பு. இறுதியில் இவர்களின் செவிகளில் தீயிட்ட அந்தச் செய்தி வெற்றிகரமான அதிரடித் தாக்குதலில் எதிரியின் முகாம் கைப்பற்றப்பட்டு அங்கிருந்த ஆயிரக்கணக்கான தோட்டாக்களையும் ஏராளமான ஆயுதங்களையும் அள்ளிக் கொண்டு மகிழ்ச்சியின் எல்லையோடுபடகுகளில்ஏறிய அவர்கள்... திரும்பி வருகின்ற பயணம். படகுகள் கவிழ்ந்து அலைகளுடன் போராடிய எங்கள் அன்புத் தோழர்கள் இருபத்தியிருவர். அவர்களோடு கில்பட்... ஆழக்கடலில் அவர்கள்கால்கள்தரையைத்தொட முயன்று தோற்று ..கரையைக் காணாது ஏமாந்து...திருமலை மண்ணில் எத்தனை எத்தனை வீரக்கதையெழுதிய புருசர்கள் இந்திய-இலங்கை இராணுவங்களுக்கு சிம்ம சொப்பனமாக விளங்கிய எங்கள் அருமைத் தளபதிகள், தனது தளபதிகளோடும் தோழர்களோடும் சேர்ந்து கில்பட்... திருமலை அடர்ந்த கானகங்களில் அவர்களின் கால்களில் தட்டுப்படாத நிலங்களேயில்லை. ஆனால் அந்த ஆழ்கடலில் அது அவர்கள் கால்களுக்கு எட்டவேயில்லை. அலைகளுடன் போராடிக்கரை சேர்ந்த ஒரிருவர் சொன்ன சோகக் கதைகேட்டு காத்திருந்த இவர்கள் கதறியழுத ஒலி ''ஐயகோ நீங்கள் அழுத ஒலி கூட எங்கள் செவிகளுக்கு எட்டவில்லையே இந்த ஆர்ப்பரிக்கும் அலைகளின்ஒலி தான் அதனை விழுங்கியதோ'' என்ற இவர்களின் ஒப்பாரிகள் இவையெல்லாம் அவர்களுக்கு கேட்டிருக்க நியாயமில்லை.

இன்னமும் எங்களால் ஜீரணித்துக்கொள்ள முடியாத அந்த நினைவுகள். அது உண்மையா என்று நம்பமறுக்கின்ற எங்கள் இதயம். அந்தச் செய்தி மாத்திரம் பொய்யாக இருக்கக் கூடாதா என்ற சில நெஞ்சங்களின் நப்பாசை. ஆனாலும் கில்பட் எங்களோடு இல்லை.

அந்த அன்புச் சோதரர்கள்; எங்கள் ஆருயிர்த் தோழர்கள்; அண்ணனின் அன்புக் குழந்தைகள்- இன்று எங்களோடு இல்லை. நிச்சயம் நம்பத்தான் வேண்டும். ஏனென்றால் அவர்களின் பிரிவு -அது நிதர்சனமாகிவிட்ட ஒன்று. ஆனாலும் அந்த இனியநினைவுகள். அவர்கள் எங்களோடு வாழ்ந்து திரிந்த அந்த இனிய நாட்கள்...... அவை இன்னும் இன்னும் எங்கள் இதயங்களில் பசுமையான நினைவலைகள்.

- நே. கபில்




## கொக்குவில் இந்துக்கல்லூரி ஆண்டு 6 அனுமதி - 1993

புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர், கல்லூரியில் சேர விருபபின் 15.12.1992,செவ்வாய்க்கிழமைக்கு முன்பு தாம் கற்ற பாடசாலை அதிபர்களிடம் இருந்து பெற்றசித்தியடைந்ததற்கான அத்தாட்சிப் பத்திரத்துடன் கல்லூரி வேலை நேரத்தில் நேரில் விண்ணப்பிக்கவும்.

(சி-5562) - அதிபர்
கொக்குவில் இந்துக்கல்லூரி

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம் வரவு செலவுத் திட்டம் 1993

1993-ம் ஆண்டிற்கு கிடைக்கக்கூடிய மாநகர வருமான மதிப்பீட்டையும் உத்தேச செலவின விபரங்களையும் உள்ளடக்கிய யாழ்ப்பாண மாநகராட்சி மன்றத்தின் வரவு செலவுத் திட்டம், 1992 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 14 ஆம் திகதி தொடக்கம் ஏழு நாட்களுக்கு யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற அலுவலகத்தில் பொது மக்கள் பார்வைக்கு வைக்கப்படுமென மாநகராட்சி மன்றங்கள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம்) (252) (212) (9) பிரிவின் பிரகாரம் இத்தால் அறிவித்தல் தரப்படுகின்றது.

வே. பொ. பாலசிங்கம்
மாநகர ஆணையாளர்
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
07-12-1992.
(சி-5571)

## 6 ஆம் மாதத்துயரின் அஞ்சலி

11-12-92



வீரவேங்கை அரசப்பன்
- குடும்பத்தினர்
சில்லாலை (சி/5565

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர் நமசிவாயம் நடராசா
அவர்கள்

தோற்றம்: 15-04-1922
மறைவு: 11-11-1992

அன்பெனும் சுடரால் ஆசையுடன் வளர்த்தெம்மை
அனுதினமும் பேணி ஆறுதல் தந்தவரே
நல்லுலகம் மெச்சுகின்ற நாம் வாழும்
வாழ்க்கைதனை
நலம் பெறச் செய்து விட்டு விண்ணுலகம்
சென்றனையோ?

20 - ஏ, ஈச்சமோட்டை,
டயஸ் கந்தசாமி வீதி,
யாழ்ப்பாணம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
[சி-5569]

# பாபர் மசூதி தகர்ப்பு; மத சார்பின்மைக்கு ஓர் அச்சுறுத்தல்

இந்தியாவின் மதசார்பின்மையை 1948 ஆம் ஆண்டு மகாத்மா காந்தியைச் சாகடித்ததன் மூலம் ஒரு முறை ஆர். எஸ். எஸ் இந்து மத அடிப்படைவாதிகள் கொன்றார்கள். மீண்டும் ஒரு முறை கடந்த 6 ஆம் திகதி பாபர் மசூதியை இடித்ததன் மூலம் ஆர். எஸ். எஸ். இயக்கத்தின் வழித்தோன்றல்களான விஷ்வ இந்து பரிஷத் (வி. இ. ப.), பாரதீய ஜனதா கட்சி (பா. ஜ. க.) பஜ்ரங்தள் ஆகிய கட்சிகளைச் சார்ந்தவர்கள் கொன்றுள்ளனர். இந்திய மாநில அவையின் தலைவர் கே. நாராயணன் குறிப்பிட்டதுபோல் 'அயோத்தியில் நடந்த சம்பவம் மகாத்மா காந்தியின் படுகொலை செய்யப்பட்ட பின்னர் இடம் பெற்ற மிகப் பெரிய அரசியற் கொலை'' என்பதில் தவறில்லை.

இந்தியாவின் தற்கொலைக்கு ஒப்பான இச் சம்பவமானது வழமைபோல அரசியல்வாதிகளின் அரசியல் லாபம் தேடும் முயற்சியின் விளைவே இதுவாகும். மத்தியில் ஆட்சியிலுள்ள இந்திரா காங்கிரஸ் கட்சியினதும் இந்தியாவின் ஆட்சி அதிகாரத்தை பிடிக்க முற்பட்ட இந்து அடிப்படைவாதிகளினதும் அரசியல் சதுரங்க விளையாட்டுகளும், வெறியூட்டப்பட்ட இந்து சந்நியாசிகளும், ராம பக்தர்களும் ஆகிய முத்தரப்பினருக்கும் இடையில் நடந்த விபரீத விளையாட்டின் விளைவே பாபர் மசூதி இடிக்கப்பட்டமையாகும்.

இந்தியாவில் 1989-1991-ம் ஆண்டுகளில் நடந்த இரு பொதுத் தேர்தல்களிலும், பா. ஜ. கவினது பிரதான தேர்தல் பிரசாரம் அயோத்தி விவகாரமாகவே இருந்தது. இதன் மூலம் பா. ஜ. க. நல்ல அறுவடையையும் பெற்றுக்கொண்டது. இதற்கு முன்னர் இரண்டு பாராளுமன்றத் தொகுதிகளை மட்டுமே கொண்டிருந்த இக்கட்சி 1989 இல் 82 லோக்சபாத் தொகுதிகளிலும், 1991 இல் 119 தொகுதிகளிலும் வெற்றி பெற்றது அத்தோடு நான்கு மாநிலங்களில் ஆட்சியையும் பெற்றுக் கொடுத்தது இதில் இந்தி மொழி பேசும் உத்தர பிரதேச மாநிலமும், மத்திய பிரதேச ஆட்சியும் முக்கியமானவையாகும்.

இதில், உத்தரபிரதேச அரசு திட்டவட்டமாக கலைக்கப்படும் என்றநிலையிலும், ஒரு துப்பாக்கிசூடு இன்றியும், இரத்தம் சிந்தப்படாமலும் அதேவேளை, பாபர் மசூதி இடிக்கப்படமாட்டாது என உயர் நீதிமன்றத்திற்கு உத்தரப்பிரதேசமுதல்வர் கல்யாண் சிங் வழங்கிய வாக்குறுதியையும் மீறி மசூதி இடிக்கப்பட்டது. பா. ஜ. கட்சியின் தலைவர் முரளிமனோகர் ஜோசி குறிப்பிட்டுள்ளது போல் ''பிரச்சினை நீதமன்றத்திற்கு அப்பாற்பட்டது. ஜன்மபூமி இன்றைக்கு இருக்கும் அரசின் அதிகாரத்திற்குள் வராது'' என்பதை நிரூபிப்பது போன்றிருந்தது இச் செயல்.

உத்தரப் பிரதேசத்தில் பா. ஜ. க. ஆட்சியைக் கைப்பற்றியதுமே இராமர் ஆலயம் அமைப்பதற்கான முயற்சிகள் தீவிரமாக முடுக்கிவிடப்பட வேண்டும் என பா. ஜ. க. யிலுள்ள தீவிரவாதிகளும் இதன் சகோதர அமைப்புக்களான வி. இ. ப. தும் பஜ்ரங்தள் போன்ற அதி தீவிரவாத அமைப்புக்களும் கோரின. புதிதாக ஆட்சிஅதிகாரத்திற்கு வந்த பாரதீய ஜனதாக் கட்சிக்கு ஒரு சிறிது கால அவகாசமே வழங்குவதற்கு இத் தீவிரவாத அமைப்புக்கள் தயாராக இருந்தன.

ஆனால் பா. ஜ. க யில் பலம் வாய்ந்த தலைவர்களில் ஒருவரான அத்வானியும் அவரது ஆதரவாளரான உத்தரப் பிரதேசத்தின் முதலமைச்சரான கல்யாண்சிங்கிற்கும் நோக்கங்கள் வேறுவிதமாகவே இருந்தன. அத்வானி பா. ஜ. கட்சியை ஒரு பலமான தளத்தில் நிறுவுவதற்கும் அதன் மூலம் மத்தியில் அரசைப்பிடிப்பதற்கும் நோக்கமாகக் கொண்டு செயற்பட்டார், இதற்கென பிற்படுத்தப்பட்ட மக்களையும் தம்முடன் இணைத்துக் கொள்ள முயன்றார். இதன் காரணமாக இராமர் ஆலயம் அமைப்பதென்பது மத்தியில் ஆட்சியைப் பிடிப்பதன் மூலமே சாத்தியமானதென்பதை வற்புறுத்தினார். இதன் காரணமாக இராமர் ஆலயம் அமைப்பதற்கான காலக்கெடுவை நீடித்து அடுத்த தேர்தலும் இராமபிரான் பெயரில் ஆதாயம் தேடுவது அவரது நோக்கமாக இருந்தது.

இதேவேளை, தீவிரமாகச் செயற்பட்டு இராமர் ஆலயம் அமைக்கும் பணியில் ஈடுபட்டால், பா. ஜ. க வகுப்புவாதக் கட்சி என்பதோடு, இந்தியாவின்நலன்களுக்கும் ஊறுவிளைவித்த கட்சி என்ற குற்றச் சாட்டிற்கு இலக்காகவேண்டிய நிலை உருவாகும் என அத்வானி கருதினார். அதேவேளை பிற்படுத்தப்பட்ட மக்களின் தலைவராகக் காட்டப்பட்ட உத்தரப் பிரதேச முதலமைச்சரான கல்யாண் சிங் இந்திய அரசியல்வாதிகளைப் போன்றே கிடைத்த பதவியை உடன் இழக்கத் தயாராக இருக்கவில்லை.

ஆனால் பா. ஜ. க யில் இருந்த தீவிரவாதிகளும் அதன் சகோதர அமைப்புக்களின் அதிதீவிரவாதிகளும் இதற்கு ஒத்துப் போகத்தயாராக இல்லை. பா. ஜ. க தலைவராக தற் பொழுது உள்ள முரளி மனோகர் ஜோசியும் இதனையே ஆதரித்தார். அவரது நிலைப்பாடு பா. ஜ. க. வில் ஏற்பட்டுள்ள அதிகாரப்போட்டியின் விளைவாக எழுந்த தொன்றாகும்.

முரளிமனோகர் ஜோசியின் இந் நடவடிக்கைக்கு இரண்டு காரணங்கள் முக்கியமானவையாக இருந்தன பா. ஜ. கட்சியின் தலைவராக அவர் இருக்கின்ற போதிலும் அத்வானியே பாரதீய ஜனதாக்கட்சியின் பெருந்தலைவராக பலராலும் மதிக்கப்பட்டார். இந் நிலையில் ஜோசி தனது புகழை தீவிரமாக வளர்ப்பதில் கவனம் செலுத்தினார். அத்தோடு இம்மாதத்தில் நடைபெறவுள்ள பா. ஜ. க. யின் தலைவருக்கான தேர்தலில் அத்வானி போட்டியிட இருப்பதால் அவரை தோற்கடிக்க வேண்டிய நிர்பந்தமும் அவருக்கு இருந்தது.

இந் நிலையில் தான் ஜோசி தீவிர இந்து அடிப்படை வாதிகளுக்குத் தலைமை தாங்க முற்பட்டார் இதன் மூலம் பாபர் மசூதியை இடித்து விட்டு (வேறு ஓரிடத்தில்கட்ட ஜோசி ஆதரவளிக்கிறார்.) இராமர் ஆலயம் அமைப்பதை தீவிரமாக ஆதரித்தார். இதே வேளை பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு எதிரான போக்குடைய யோசி கல்யாண்சிங் தலைமையிலான உத்தரப் பிரதேச பா. ஜ. அரசு கலைக்கப் பட்டால் ஒரு கல்லில் இரு மாங்காய்கள் என்ற நிலையில் இருந்தார்.

பா. ஜ. க. அரசு பதவி நீக்கப்பட்டால், அதன் மூலம் இராமர் ஆலயத்திற்காக பதவியைத் தியாகம் செய்த கட்சி என்ற ரீதியில் இந்துக்களிடம் பெரும்செல்வாக்குப்பெறலாம் என்பது. மற்றது அத்வானியின் ஆதரவாளரான கல்யாண் சிங்கின் ஆட்சி கவிழ்க்கப்படுவது; இவற்றின் மூலம் தனது தலைமைத்துவத்திற்கு அத்வானியிடம் இருந்து அச்சுறுத்தல் ஏற்படுவதைத்தடுக்கலாம் என்ற கருத்தினைக் கொண்டிருந்தார்.



பாபர் மசூதியின் மீது
இந்து அடிப்படைவாத தீவிரவாதிகள்

இந் நிலையில்தான் பா. ஜ. கட்சியின் ஒரு பகுதி ஆதரவுடன் அதன் சகோதர அமைப்புக்களான வி. இ. ப. பஜ்ரங்தள், சிவசேன தொண்டர்கள் பாபர் மசூதியை இடிக்கக் கூடியதாக இருந்தது. இதேவேளை மசூதி தகர்ப்பானது நன்கு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்பட்டது என்பதில் சந்தேகப்பட எதுவும் இல்லை. ஏனெனில் இது குறித்து இரண்டு வார பயிற்சியை சிவசேனையினர் நடத்தியதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஆனால், அத்வானி, வாஜ்பாய் போன்ற பா. ஜ. க. தலைவர்கள் தடுத்து நிறுத்த முற்பட்ட போதும் முடியாமல் போய்விட்டது என்று கூறப்படுவது ஓரளவிற்கு ஏற்புடையதாகவே எடுத்துக்கொள்ளலாம். ஆனால், இந்நிலை உருவாவதற்கானநிலையை தோற்றுவித்ததில் இவர்களின் பங்கு கணிசமானது என்பதை மறுக்கமுடியாது

இதேவேளை, உத்தரப்பிரதேசத்தில் இருந்த பா. ஜ. க அரசாங்கத்தினாலும் எதனையும் சாதிக்கமுடியாத நிலை ஏற்பட்டுவிட்டது. பாபர் மசூதிக்கு பாதுகாப்பு அளிக்கப்படும் என உச்சநீதிமன்றத்திற்கு கல்யாண்சிங் அரசஉத்தரவாதம் அளித்திருந்தபோதும், பாபர் மசூதியைப் பாதுகாக்க துப்பாக்கி தாங்கிய பொலிசாரைக்கூட அவரால் அனுப்ப முடியாது போனது. இதன் விளைவு பாபர்மசூதிக்கு பாதுகாப்புக்கு அனுப்பப்பட்ட பொலிசாரே ''இராமபிரான் நாமம் வாழ்க'' எனக் கோசமிட்டேர்ந்தது.

வேறு வகையில் கூறினால், பா. ஜ. க. யில் இருந்த மிதவாதிகள் தீவிரவாதிகளால் தோற்கடிக்கப்பட்டனர் என்றே கூறலாம். தோற்கடிக்கப்பட்டவர்களில் அத்வானியும், கல்யாண்சிங்கும் அடங்கும். இது வளர்த்தகடா மாரில் பாய்வதற்கு ஒப்பானது என்றே கூறலாம்.

பா ஜ கட்சிக்குள் மேற்கூறப்பட்டவாறு இருந்த உள் முரண்பாடு பாபர் மசூதியைப் பாதுகாக்க முடியாமல் செய்ததென்றால் இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் கடைப்பிடித்த மெத்தனப்போக்கும், அத்வானி போன்றவர்கள் பால் கொண்டிருந்தநம்பிக்கையும் பாபர் மசூதியை இடிப்பதற்கு வழி வகுத்ததெனலாம்.

இந்திராகாங்கிரஸ்கட்சி மத சார்பின்மையைக் கொள்கையாகக் கொண்டது என்று பிரசாரம் செய்துவரும் காலத்திற்குக் காலம் வாக்கு வங்கியை நிரப்புவதற்கு காங்கிரஸ் கட்சி பாபர்மசூதிப் பிரச்சினையில் இந்து தீவிரவாதிகளைத் திருப்திப் படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொண்டே வந்தது. எடுத்துக்காட்டாக 1986 இல் கட்டடத்தின் கேற்றை இந்துக்களுக்கு திறந்து விட்டது. அதேபோன்று 1989 தேர்தல் நன்மை கருதி இராமர் கோவில் அமைப்பதற்கான அடிக்கல் நாட்ட அனுமதித்திருந்தது.

ஆனால், இம்முறைநரசிம்மராவ், நீதிமன்றத்தின் துணையையே பெரும்பாலும் நாடியிருந்தார். இதற்கு அத்வானி போன்ற பா ஜ க. தலைவர்கள் நீதிமன்றத்தின் தீர்ப்பிற்குக் கட்டுப்படுவார்கள், சட்டஆட்சிக்கு மதிப்பளிப்பார்கள் என நரசிம்மராவும் நம்பினாரா? அல்லது ஆலயம் கட்டும் விவகாரம் நீதிமன்றத்திற்கும் அப்பாற்பட்டது என்ற இந்து அடிப்படை வாதிகளின் சட்டம், ஒழுங்கு மீறலைச் சாட்டாக வைத்து பா ஜ. கட்சியை சட்டம் ஒழுங்கைப் பேணாதஓர் வன்முறையாளர் கூட்டம் எனக்காட்டி அரசியல்ரீதியாக அவர்களை ஓரம் கட்டி விடலாம். இதனால் இந்திரா காங்கிரஸ் ஆட்சிக்கு எதிர்காலத்தில் ஏற்படும் அச்சுறுத்தலை தவிர்த்து விடலாம் எனக் கருதினாரா என்பதை உடன் அறுதியிட்டுத் தெரிவித்துவிட முடியாது உள்ளது.

ஆனால், இவ்விவகாரத்தில் யூன் மாதத்தில் ஏற்பட்ட நெருக்கடியைத் தொடர்ந்து ஒக்டோபர் 10 வரை பிரதமர் நரசிம்மராவ் கால அவகாசம் பெற்றிருந்தார் என்றாலும் அவரின் நடவடிக்கைகள் பெரும் முன்னேற்றகரமாக இருக்கவில்லை, அவர் புரிந்த சாதனை இருவரையும் பேச்சுவார்த்தைக்கு கொண்டுவந்ததே.

ஆனால், இறுதியாக அயோத்தியில் துப்பரவு வேலைக்கென கரசேவகா தொண்டர்கள் கூடிய போது உத்தரப்பிரதேச முதலமைச்சர் கல்யாண் சிங்நீதிமன்றத்திற்கு வழங்கிய வாக்குறுதியை மட்டும் நம்பியிருக்க கூடிய ஓர் அசட்டுப்பேர்வழி என பிரதமர் நரசிம்மராவை எண்ணிவிட முடியாது ஏனெனில் அயோத்தியின் களவிவகார நிலைகளை மத்திய அரசு அறியாமல் இருப்பதற்கு நியாயம் எதுவுமில்லை. அத்தோடு, சுமார் ஐந்து லட்சத்திற்கு மேற்பட்ட தீவிரவாத இந்துக்கள் கூடியுள்ள சந்தர்ப்பத்தில் அதுவும் அடிக்கடி உணர்ச்சிக் கொந்தளிப்புகள் இடம் பெறும் ஓர் இடத்தில் அமைதியான முறையில் எல்லாம் இடம் பெறும் என எதிர்பார்க்கவும் முடியாது,

இந்நிலையில் பாபர் மசூதி விவகாரத்தில் மத்திய அரசின் நடவடிக்கைகள் கேள்விக்குரியதாகவே உள்ளது. பாபர் மசூதியைப் பாதுகாக்க மத்திய அரசு திடமாகவே உறுதி பூண்டிருக்குமானால், இரத்தம் சிந்தப்பட்ட பின்னராவது மசூதி பாதுகாக்கப் பட்டிருக்கும். ஆனால், மசூதியைப் பாதுகாப்பதற்காக தனது ஆட்சியை பணயம் வைக்க நரசிம்மராவ் தயாராக இருக்கவில்லை என்றே தெரிகிறது.

இதனால் பாபர் மசூதி இடிக்கப்பட்டமைக்கு பா ஜ. கட்சியும் அதன் தோழமை அணிகள் மட்டும் தான் பொறுப்பு என்பதைவிட மத்தியில் உள்ள இந்திரா காங்கிரஸ் அரசுமே பொறுப்பாகும். இந்நிலையில் பா. ஜ. கட்சியும், இந்திராகாங்கிரஸ்கட்சியும் பாபர் மசூதியை தகர்க்க அனுமதித்தன் மூலம் தமது அரசியல் ஆதாயத்திற்கென இந்தியாவின் மொத்த நலனையும் பலியிட்டுள்ளார்கள் என்றும் கூறலாம்.

**—ஜெயராஜ்**

---

மட்டுவில்

பட்ட குண்டுகள் வீசப்பட்டதாக தெரியவருகிறது சுமார் 15 நிமிடங்கள் வரை இத் தாக்குதல்கள் இடம்பெற்றன.

இத்தாக்குதலில் மட்டுவில் தெற்குப் பகுதியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தாயான திருமதி சாந்தநாயகி பரமநாதன் (வயது 35), திரு கந்தையா முருகேசு (வயது 70) ஆகிய இருவரும் கொல்லப் பட்டனர்.

மேலும் இத்தாக்குதலால் மட்டுவில் தெற்கு நுணாவில் பகுதிகளைச் சேர்ந்த சின்னம்மா 40), அப்புச்சி (16), நந்தினி (22), சசி (06), ரஜீவன் (08), சின்னத்தம்பி (30), கிருஸ்ணன் ஜீவாதரன் (18), அருளானந்தம் அருணா (04), சின்னராசா விஜிதா (16), பூபாலச்சந்திரன் சந்திரமலர் 52), தயா சாள்ஸ் (04), சின்னத்தம்பி சந்திரகுமார் (12), நிசாந்தன் (07), பாலசிங்கம் சுபேந்தினி (21), நடராசா வசந்தாதேவி (30) ஆகியோர் காயமடைந்தநிலையில் யாழ் போதனா வைத்தியசாலையிலும், சாவகச்

---

கனிஷ்ட

ஆண்டு 9-ல் கல்வி கற்கும் மாணவர்களை தமது பாடசாலை அதிபர்களுடன் தொடர்பு கொள்ளுமாறும் யாழ். கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

---

சேரி அரசினர் வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் ஐந்திற்கும் மேற்பட்ட வீடுகளும், மட்டுவில் சிவன்கோயில் தூண்களும் சிறிது சேதமடைந்தன.

நேற்று சாவகச்சேரி சந்தை நாளாகையால் சந்தைக்கு வந்திருந்த பொது மக்கள் தனங்கிளப்பு வயற்பகுதிகளுக்கு பாதுகாப்பிற்காக ஓடிச் சென்றனர்.

கடந்தமாதம் 26 ஆம் திகதியன்று சாவகச்சேரி நுணாவில் பகுதியில் சுப்பர்சொனிக் விமானங்கள் மேற்கொண்ட குண்டு வீச்சுத் தாக்குதலில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று சகோதரர்கள் பங்கருக்குள் பலியாகியது தெரிந்ததே.

(பா, மு)

# இந்து - முஸ்லிம் கலவரம் 1000க்கு மேற்பட்டோர் பலி

## 24 ரயில் பயணிகள் வெட்டிக் கொலை

(டில்லி)

அயோத்திச் சம்பவங்கள் விளைவாக ஏற்பட்ட வன்முறைகளால் இதுவரை 1000 க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர்.

குஜராத் மாநிலத்தில் கடுமையான இனக்கலவரங்கள் நேற்றும் நடைபெற்றதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. நேற்றுக் காலை 24 ரயில் பிரயாணிகள் கத்தியால் வெட்டப்பட்டுக் கொல்லப்பட்டார்கள் இந்தச் சம்பவம் சூரத் புறநகர்ப் பகுதியில் நடந்தது. குஜராத்தில் நான்கு நாள்களில 200 க்கும் அதிகமானவர்கள் உயிரிழந்துள்ளார்கள்.

கர்நாடகத்தில் வன்முறைகளில் இதுவரை 53 பேர் கொல்லப்பட்டிருக்கிறார்கள். தமிழக அரசு தனது சிறப்புப் பொலிஸ் படையில் இரு பிரிவுகளை கர்நாடக அரசுக்கு உதவியாக அனுப்பியுள்ளது. பங்களூரில் கும்பல் ஒன்று வழிபாட்டுத் தலம் ஒன்றைத் தாக்க முயற்சித்த சமயம் பொலிஸ் சுட்ட போது மூவர் கொல்லப்பட்டனர்.

ஆந்திரப் பிரதேசத்தில் கொல்லப்பட்டவர் தொகை 24 ஆக உயர்ந்துள்ளது. ஆந்திர மாநில பாரதீய ஜனதாக் கட்சிச் செயலாளரும் சட்ட மன்ற உறுப்பினர் நரேந்திரன் என்பவரும் 100 தொண்டர்களுடன் ஹைதராபாத் வானொலி நிலைய பகுதியில் ஆர்ப்பாட்டம் செய்யும் போது கைதுசெய்யப்பட்டனர்.

கேரளத்தில் இறந்தவர் தொகை 12-ஐ எட்டி விட்டது.

## பாபர் மசூதியை தகர்க்க இருவாரப் பயிற்சி

(டில்லி)

அயோத்தியில் பாபர் பள்ளிவாசலை இடித்துத் தரைமட்டமாக்குவது பற்றி இந்துக்கள் சிலருக்கு இரண்டு வாரங்கள் பயிற்சி வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

தீவிரவாத இந்துக்களான 500 சிவசேனைத் தொண்டர்கள் முகாம் ஒன்றில் இருவாரங்கள் இப் பயிற்சியை பெற்றுக் கொண்டனர் என்றும் இதனாலேயே அவர்கள் கன கச்சிதமாக மசூதியை இடித்து தள்ளினர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## 5 அமைப்புகள் தடை

மத்திய அரசினால் நேற்று வகுப்பு வாதக் கட்சிகள் என ஐந்து அமைப்புக்கள் மீது தடை விதிக்கப்பட்டது.

விஷ்வ ஹிந்துப் பரிஷித், பஜரால்தள், இஸ்லாமிய சேவா சங், ஜமாலியா இஸ்லாமி மற்றும் ராஷ்டிர கிராம சேவா சங் ஆகிய அமைப்புக்களே தடை செய்யப்பட்டன. சட்ட விரோத நடவடிக்கைகள் பாதுகாப்புச்சட்டம் 1967 இன் கீழ் இத்தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இடம் பெயர்ந்த மக்களுக்கு இலவச உலர் உணவு எந்தெந்த பலநோக்கு கூட்டுறவு சங்கங்களினால் வழங்கப்பட வேண்டும் என்பதையிட்டு தீர்மானிப்பதற்கான ஆலோசனைக் கூட்டம் ஒன்று இன்று காலை 10 00 மணிக்கு செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும். (22)

---

யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றம்

## ஆதனவரி அறிவித்தல்

1992-ம் ஆண்டு 4-ம் கந்தாயத்துக்கான ஆதனவரியை 31-12-92 வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு முன்னதாக எவ்வித தண்டமுமின்றி அலுவலகத்தில் செலுத்தலாம் எனவும், குறிப்பிட்ட திகதிகுப் பின்னர் செலுத்தப்படும் வரிப்பணத்துக்கு மேலதிகமாகக் கீழ்வரும் விபரப்படி வெளியாத்துப் பணம் அறவிடப்படுமெனவும் இத்தால் அறியத்தருகின்றேன்.

| | | |
|---|---|---|
| வெற்றுக்காணிகள் மற்றும் குடியிருப்புக் காணிகள் | — | 15 வீதம் |
| இவையல்லாத காணிகளுக்கு | — | 20 வீதம் |

காசோலைகள், காசுக்கட்டளைகள் யாவும் 'யாழ்ப்பாணம் மாநகர ஆணையாளரின்' பெயரில் அனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பும்போது அஞ்சல்சேவையில் ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்க்கும்பொருட்டு முன்கூட்டியே அனுப்புவதோடு, உரிய ஆதனங்களின் வரிமதிப்பு இலக்கம், வீதியின் பெயர், வட்டார இலக்கம் ஆகிய விபரங்களையும் தயவுசெய்து இணைக்குக.

வே. பொ. பாலசிங்கம்,
மாநகர ஆணையாளர்.
யாழ்ப்பாணம்

மாநகராட்சிமன்ற அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
08-12-1992.

(சி-5570)

---

## மரண அறிவித்தல்

### சி. நடராசா

கல்லூரி வீதி, காங்கேசன்துறை வாசியும், தற்சமயம் மானிப்பாயில் வசித்தவருமான சின்னப்பு நடராசா 10 - 12 - 1992 வியாழக்கிழமை காலமாகிவிட்டார் அன்னார் காலஞ்சென்ற நாகம்மாவின் (பாக்கியம்) அன்புக் கணவரும், ஜெகதீசனின் மாமனாரும், கமலாசனி தேவியின் பெரிய தந்தையாரும், மாவீரர் பகீரதன் (இராஜேந்தர்), கிரிதரன், சுதர்சனா (ஈழச்செல்வி), சுரேந்தினி, சிவஜனனி ஆகியோரின் பேரனுமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று வெள்ளிக்கிழமை காலை 11.00 மணியளவில் மானிப்பாயில் நடைபெறும்.

பாரத் வீதி,
மானிப்பாய்.

தகவல் தருபவர்:
வி. ஜெகதீசன்
(மருமகன்)

[3774]

---

விமானப்படையை

வெளியூர் ஆயுத விற்பனையாளரிடம் கேள்விப் பத்திரங்களைக் கோரியுள்ளது.

''ஜேன்ஸ் டிபென்ஸ்'' எனும் சஞ்சிகையின் கூற்றுப்படி எம். ஐ - 8 ரக யுத்த ஹெலிகப்டர்கள் மிகவும் சக்திவாய்ந்தவை எனவும், றொக்கட்டுக்கள், இயந்திரத் துப்பாக்கி, டாங்கி எதிர்ப்பு ஏவுகணைகள் மற்றும் சக்திவாய்ந்த தொலைத்தொடர்பு சாதனங்கள் என்பனவற்றைக் கொண்டன எனவும் தெரியவருகின்றது

தற்பொழுதுஇந்தியா உட்பட 40நாடுகளில் இவ்வகை ஹெலிகப்டர்கள் பாவனையில் உள்ளன.

---

பேரை

தெரிவிக்கின்றன.

இராணுவத்தில் தொடர்ச்சியாகபல இழப்புக்கள் ஏற்பட்டு வருகின்ற வேளையில் விடுதலைப் புலிகளுடன் பேச்சு வார்த்தை நடத்துவதை இராணுவத் தளபதிகளும் விரும்பவில்லை எனவும் அறியவருகின்றது. எவ்வாறானாலும் இராணுவ ரீதியில் விடுதலைப் புலிகளைப் பலவீனப் படுத்தி ஓர் இராணுவ அழுத்தத்தை ஏற்படுத்தி புலிகளை பணிய வைத்து பின்னர் பேச்சு வார்த்தை நடத்துவதையே அரசாங்கம் விரும்புவதாகவும் அறிய முடிகின்றது.

இந்நோக்கத்திற்காக இன்று ஆயுதப்படைகளை நவீனப் படுத்தவும், புதிய போர் யுக்திகளைக்கையாள்வது குறித்தும் தீவிர கவனம் செலுத்தப்பட்டு வருவதாகவும் தெரிய வருகின்றது.

சிங்களச் சிப்பாய்களின் மனோநிலை தளர்ந்து விடுதலைப் புலிகளுக்கு எதிராக போராட மறுத்துவரும் வேளையில் இராணுவ தளபாடங்களை நவீனப்படுத்தி அவற்றின் மூலம் புலிகளுக்கு பெரும் சேதத்தை விளைவிப்பதே புதிய திட்டமாகும் எனவும் அறிய வருகின்றது

இதன் மூலம் இராணுவத்தினருக்கு தென்பூட்டலாம் எனவும் அரசுவட்டாரங்கள் கருதுவதாகவும் தெரிகிறது.

இதே வேளை இராணுவத்தினரின் இப்போர் யுத்திகள் ஜனவரி மாதத்தில் இருந்து அமுல்படுத்தப்படும் எனவும் அறியமுடிகிறது,

---

கடன்

நிறுவனங்களின் பிரதி நிதிகள் கலந்து கொண்டனர்.

கடந்த கால சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகளால் பலர் தமது சொந்த தொழில்களை இழந்து வருமானமற்ற நிலையில் உள்ளனர். இவர்களுக்கு வங்கிகள் மூலம் கடனைப் பெற்றுக் கொடுக்க ஆவன செய்யப்படல் வேண்டும் என அங்கு யாழ். அரச அதிபருக்கு சுட்டிக்காட்டப்பட்டது.

இக் கோரிக்கையை ஏற்றுக் கொண்ட அதிபர் வங்கி அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு ஆவன செய்வதாக உறுதி அளித்துள்ளார்.

---

கொழும்பு

தால் அதி தீவிர பாதுகாப்பு வழங்குமாறு நாட்டில் உள்ள சகல பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவிக்கப் பட்டுள்ளது. இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார்.

முகத்துவாரம், பம்பலப்பிட்டி, வெள்ளவத்தை, தெகிவளை, புறக்கோட்டை, கொம்பனி தெரு, கொட்டாஞ்சேனை, ஆமர் வீதி பகுதிகளில் இந்துக் கோவில்களுக்கும் வவுனியா முஸ்லிம் பள்ளிவாசலுக்கு விசேட பொலிசாரை சேவையில் ஈடுபடுத்த இருப்பதாக அவர் தெரிவித்தார்

அன்றைய தினம் கூட்டம் கூடுதல், ஊர்வலம் செல்லுதல் போன்றவற்றிற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளதாகவும் கலவரம் ஏற்பட்டால் அடக்கும் பொருட்டு பொலிசாருக்கு விசேட அதிகாரங்கள் வழங்கப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

---

படகு

ஏற்றிவந்த படகொன்றை சிறிலங்கா கடற்படையினர் துரத்திவந்ததாகவும், அதைக் கண்ட படகோட்டிகள் இருவரும் கடலில் குதித்து நீந்தி கரை சேர்ந்ததாகவும் அவர்களது படகை கடற்படையினர் கட்டியிழுத்துச் சென்றிருக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டது. (மு)

---

விமான

மேற்படி பரீட்சை நிலையங்களில் பரீட்சைகள் நடைபெற்றன.

சிறிலங்கா விமானப் படையினரின் இந்நடவடிக்கையினைக் கண்டித்து யாழ். பிரதேச கல்விப் பணிப்பாளர் பரீட்சை ஆணையாளருக்கு அவசர வானொலிச் செய்தியொன்றை அனுப்பிவைத்துள்ளதாகத் தெரியவருகிறது.

அத்துடன் இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் இச்செயலை கண்டித்துள்ளதோடு சிறிலங்கா ஜனாதிபதிக்கும் பரீட்சை ஆணையாளருக்கும் செய்திகளை அனுப்பியுள்ளது, (பா)

---

உண்ணாவிரதிகள்

பெற்றோர் 200 பேர் வரையில் உண்ணாவிரதமிருக்க முற்பட்டபோது பொலிசார் அவர்களைத் தடுத்துள்ளனர். தொடர்ந்து அருகிலிருந்த விகாரைக்குள் அவர்கள் உண்ணாவிரதம் இருக்க முற்பட்ட போது பொலிசார் ஆலயத்தை நோக்கி எச்சரிக்கை வேட்டுகளைத் தீர்த்ததுடன் குண்டாந்தடி பிரயோகம், கண்ணீர்புகைக் குண்டு வீச்சையும் நடாத்தியுள்ளனர்.

இதன் போது பொலிசாரின் இச்செயல்களை கண்டிக்க முற்பட்ட வாசுதேவ நாணயக்கார மற்றும் மகிந்த ராஜபக்ச ஆகியோர் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்நடவடிக்கைகளின் போது அரசியல் வாதிகள் ஐவர் படுகாயமடைந்தனர். மற்றும் பத்திரிகையாளர்கள் பொது மக்கள் உட்பட ஐந்திற்கு மேற்பட்டோர் காயமடைந்தனர், இதனைத் தொடர்ந்து மாலை யூனியன் பிளேசில் பொலிசாரின் இந்நடவடிக்கையை கண்டித்து பொதுமக்கள் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடாத்தினர்.

---

## மரண அறிவித்தல்

### சிவகுருநாதன் பாலசிங்கம்

[இளைப்பாறிய எழுதுவினைஞர் சுகாதாரத்திணைக்களம்]

புன்னாலைக் கட்டுவனைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், கட்டுடையை வசிப்பிடமாகக் கொண்டவருமான சிவகுருநாதன் பாலசிங்கம் (இளைப்பாறிய எழுதுவினைஞர் சுகாதாரத் திணைக்களம்) [10 - 12 - 1992] நேற்று காலமானார். அன்னார் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும் (இளைப்பாறிய ஆசிரியை), சிறீதரன் (பிரான்ஸ்), சிறீகங்கன் (U. K.), ரஜித்தா (U. K.) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், தவலோகநாயகி, விஜயலஷ்மி, ரஞ்சன் ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரஜிததின் அன்புப் பேரனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமச்சடங்குகள் சனிக்கிழமை (12-12-92) நாளை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
மனைவி

கட்டுடை, மானிப்பாய்.

(3775)

---

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 10.12.92

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்;- 7054

வட பகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

24-3092, 26-2764, 27-6741, 27-3583, 28-0364, 24-5939, 26-5882, 26-3183, 24-9410.

வட பகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

41-8557, 42-1750, 43-2524, 24-4476, 41-6933, 24-0917, 24-1040, 24-4726, 22-1647, 26-5560, 24-9967, 24-9744, 28-3004, 27-6533, 24-3364, 24-5734, 27-2016, 28-6748, 26-4568, 26-7039, 42-266, 24-0523, 28-1414, 26-6029, 28-3587, 41-2309. 27-5187, 24-546, 24-8391.

---

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி,31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 11 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.